Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 17 | 02-12-2004 | வியாழக்கிழமை | ஓசை -288


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம்.
T.P:0712-610008 (சி-10703)
விநாயகர் வீதி, மயிலிட்டி.

# புலிகளின் கோரிக்கை அடிப்படையில் பேச்சுகளுக்கான வாய்ப்பு மிக அரிது!

## அரச தகவல் திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் இயக்கம் ஒருதலைப்பட்சமாக முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைபின் அடிப்படையில் ஒரு தனியான நிகழ்ச்சி நிரலின்கீழ் எந்தவித நிபந்தனையும் இன்றி பேச்சுக்களை ஆரம்பிக்கக் கோரி விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிவிப்பின் அடிப்படையில் காரியங்களை முன்னெடுக்கும் சூழ்நிலை மிக அரிதாகவே காணப்படுகின்றது. அத்தோடு விடுதலைப்புலிகளின் இக்கோரிக்கை மிரட்டும்பாணியில் அமைந்துள்ளது எனஅரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இவ் அறிக்கையின் விபரம் வருமாறு;

2003ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டமை எவருக்கும் நன்மை அளிக்கும் விடயமல்ல எனவே ஐக்கிய மக்கள் சுதந்தர முன்னணி அரசாங்கம் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் பதவிக்கு வந்தது முதல் விடுதலைப்புலிகளுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு தீர்க்கமான மனப்பூர்வமான தொடர்ச்சியான முயற் சிகளைக் கொண்டுள்ளது.

இந்த முயற்சிகளை இலங்கை மக்களும் சர்வதேச சமூகத்தினரும் நன்கறிவர். விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பூரண ஹர்த்தாலுக்கு வெகுசன அமைப்புகள் அழைப்பு

மன்னாரில் பொது அமைப்புகள் ஒன்று கூடி இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி விளையாட்டு மைதானத்தில்அப்பாவி இளைஞர்கள்சுட்டுக் கொல்லபட்டமை மன்னார் நகரில் பொதுமக்கள் போராளிகள் மீதான தாக்குதல்,வவுனியாவில் பொது மக்கள் போராளிகள் மீதான தாக்குதல், செய்தியாளர்கள் தாக்கப்பட்டமை என்பவற்றைக் கண்டித்தும் முழுக்கதவடைப்பும்,ஹர்த்தாலும் அனுசரிக்க எற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தேசியக் கொடியை அவமதித்து இடைக்கால நிர்வாகத்தை வழங்க தாமதம் போன்ற விடயங்களை முன்வைத்தும் மன்னாரில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தொழிற்சங்கங்களின் இணையம் என்பன முடிவுசெய்துள்ளன.

இது சார்பாக மன்னார் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது. (18)

## தமிழ் மக்கள் தமது விருப்பிற்கு இந்தியா கேடு விளைவிக்காதென நம்புகின்றனர்

### -தமிழ் கூட்டமைப்பினர் தெரிவிப்பு

சிறிலங்காவில் தமிழ் மக்களுக்கு சமாதானத் தீர்வே பிரதான தேவை. தமிழ் மக்களின் விருப்பங்களுக்கு கேடு விளைவிக்கும் வண்ணம் இந்தியா செயற்படாது என தமிழ் மக்கள் நம்புகின்றனர். எனவே இந்திய சிறிலங்காப் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை, வடக்குக் கிழக்கில் இராணுவ ரீதியான விஸ்தரிப்பு நடவடிக்கைகள் என்பனவற்றை முன்னெடுக்க வேண்டாம் என தமிழ் மக்கள் முறையீடு செய்துள்ளனர். என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கையிற் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பெருந்தொகையான சிறில.கடற்படைக்கு அடுத்த ஆண்டில் இந்தியா பயிற்சி வழங்கும்

### இந்தியக் கடற்படைத் தளபதி அருண்பிரகாஸ்

இந்தியா தனது கடற்படையில் கூடுதலாக யுத்தக் கப்பல்களை சேர்த்துக் கொள்ள உள்ளது என்றும், சிறிலங்கா, மியன்மார் உட்பட அயல் நாடுகளுடன் கடற படைஒத்துழைப்புக்களை அதிகரிக்க இருக்கிறது என்றும் இந்தியக் கடற்படை தளபதி அருண்பிரகாஸ் நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். சிறிலங்காவில் கடற்படைக் கப்பல்களை மீளப் பொருத்துவது, கடற்படையினருக்கு பயிற்சி அளிப்பது என்பவற்றை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இ.நி.வரைபை செயற்படுத்த முனைந்தால் தெற்கில் ஆயுதக் கிளர்ச்சி வெடிக்கும்

### - பாராளுமன்றத்தில் ஜே.வி.பி. எச்சரிக்கை

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபை தமது எதிர்ப்பையும் மீறி அரசு அமுற்படுத்துமானால் தென்னிலங்கையில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலமை உருவாகும் என்று, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபை சபையில் வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று பாராளுமன்றின் நேற்றுமுன்தினம் அமர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியதற்கு ஜே.வி.பியின் முக்கியஸ்தர் நந்தன குணதிலக பதிலளித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீதான அவதூறுப் பிரச்சாரம்; அரச வானொலி மீது கடும் கண்டனம்!

### – யாழ். மாவட்ட அரசியல்துறை விடுத்தது

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட குருநகர் மற்றும் திருநகர் கிராமங்களைச் சேர்ந்த குழுக்களிடையே இடம்பெற்று வரும் குழப்பங்களிற்கு விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தி இலங்கை வானொலியின் தேசியசேவை நேற்று வெளியிட்ட செய்திகளுக்கு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை கடும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. அத்துடன் இவ் ஆட்சேபனை தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் தாம் முறையிடப் போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் நேற்று 6.30மணிக்கு இலங்கை தேசிய சேவையில் குருநகர், திருநகர் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுமக்கள் மீது தாக்குதலை மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறில.வின் அரசியல், இராணுவ மனோநிலை மாற்றம் சமாதான முன்னெடுப்புகளின் வெற்றிக்கு அவசியம்

### -அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

சமாதான முன்னெடுப்புகளில் வெற்றி காண்பதற்கும், இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண்பதற்கும் சிறிலங்காவின் அரசியலிலும் இராணுவ விஸ்தரிப்பிலும் ஒரு மனோநிலை மாற்றம் அவசியம் என விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் “முதலில் இலங்கை” என்ற குழுவுடன் கிளிநொச்சியில் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தில் நடந்த சந்திப்பில் கூறியுள்ளார். சமாதான முன்னெடுப்புக்களிற்கு அடித்தளமான போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகக் குறிப்பிடுகையில் உடன்படிக்கையின் அடிமட்ட மீளக்குடியமர்தல் புனரமைப்பு புனர்நிர்மாணம் என்பன



(12ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் இன்று கிளிநொச்சி வருகிறார்

இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் இன்று கிளிநொச்சிக்கு வருகைதந்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச்செல்வன் அவர்களைச் சந்திக்கவுள்ளதாக பி.பி.ஸி. தெரிவித்தது.இது வழமையான சந்திப்பு என்றும் அது தெரிவித்தது.

## நூல் வெளியீட்டு விழாவில் திருமாவளவன் சிறப்புரை

(அலுவலக செய்தியாளர்)



இன்றுஅறிமுகம் செய்துவைக்கப்படவுள்ள அறிவமுதுப் பதிப்பகத்தின் புதிய நூல் வெளியீட்டு விழாவில் தமிழ்நாடு விடுதலைச்சிறுத்தைகளின் தலைவர்தொல். திருமாவளவன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.

மேற்படி நிகழ்வு பிற்பகல் 3.00 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## வரிவிளம்பரம்

**பெயர் மாற்றம்**

இல.69 உதயநகர்மேற்கில் வசித்துவரும் பொலிக்காப் பிறேம் குமார் ஆகிய நான் 01.12.2004 தொடக்கம் எனதுபெயரை பொலிக்காப் சுகிர்தன் என பெயர் மாற்றம் செய்துள்ளேன். தகவல் பொ.சுகிர்தன். (5329)

**விற்பனைக்குண்டு**

பாவனைக்குரிய 5லான்ட் மாஸ்டர்கள் விற்பனைக்குண்டு விலை நேரில் பார்த்து தீர்மானிக்கலாம்தொடர்புகளுக்கு S.உமா காந்தன் செல்வச்சுடர் பல்பொருள் உதிரிகள் வாணிபம்., கனகபுரம் வீதி, கிளிநொச்சி. (5325)

**தவறிவிட்டது**

யேசுராசா வித்தி என்பவரது புகைப்படக்கருவி விசுவமடு துயிலும்இல்லத்திற்கும் தேராவில் குளத்திற்கும் இடையில் 27.11.2004 அன்று தவறிவிட்டது. அதனைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும் சன்மானம்வழங்கப்படும் தகவல் யே.வித்தி. (5318)

# சர்வதேச ஊனமுற்றோர் தினம் நாளை கொண்டாட ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினால் சர்வதேச ஊனமுற்றோர் தினம் நாளை கொண்டாடப்படவுள்ளது.

கிளிநொச்சியில் அமைந்துள்ள ஊனமுற்றோர் புனர்வாழ்வு தலைமைச்செயலகத்தில் (கறோட்) நாளை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மேற்படி சர்வதேச ஊனமுற்றோர் தினக் கொண்டாட்ட நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம்சங்க நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

# உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு சுகாதார ஊழியர்களுக்கு கருத்தரங்கு

உலக எயிட்ஸ் தினமான நேற்று சுகாதார ஊழியர்களுக்கு எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது. கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

உலக எயிட்ஸ் தினத்தையொட்டி கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்குபற்றியுள்ளனர். இதனால் இதற்கான முடிவுகளை இறுதி செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், பரிசளிப்புப் பற்றிய அறிவிப்பு விரைவில் வெளியிடப்படுமெனவும் கிளிநொச்சி பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிக்கின்றார்.

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

## சந்தைகள்,இறைச்சிக்கடைகளுக்கான மீள் கேள்வி அறிவித்தல்-2005

1.கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி:- 2004.12.13 நண்பகல் 12.00 வரை

2.கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி :- 2004.12.14 நண்பகல் 12.00 மணிவரை

3.கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2004.12.14 பிற்பகல் 2.00 மணிக்கு

4.கேள்வித்தொகை, கேள்விப்பத்திரப்பணம் ஆகியவற்றிற்குரிய பெறுமதி சேர்வரி 15 சேர்த்து அறவிடப்படும்.

5.மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமையலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

6. கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப் பாணம் அவர்களுக்கு அனுப்புவதுடன் மறுபிரதியை தலைமை அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ சேர்க்கப்படுதல்வேண்டும்

## அட்டவணை

| குத்தகைவிபரங்கள் | மாத வாடகை | கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (வரிநீக்கலாக) |
|---|---|---|---|---|
| **1.மானிப்பாய் பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1)மானி.பொதுச்சந்தை (து.ச.வ. தரிப்பிடம் உட்பட) | - | 500/= | 2000/= | 375.00 |
| 2)மானி.பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 400/= | 300/= | 2000/= | 210.00 |
| 3)மானி.பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/= | 300/= | 1500/= | 40.00 |
| 4)மானி.பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | - | 300/= | 1500/= | 20.00 |
| **2.மானிப்பாய் கிராம உப அலுவலகம்** | | | | |
| 1)சாவற்கட்டு சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 50.00 |
| 2)ஆனைக்கோட்டைச்சந்தி மாட்டிறைச்சிக்கடை | - | 300/= | 1500/= | 190.00 |
| 3)நவாலி பிரசாத்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 400/= | 300/= | 1500/= | 61.00 |
| 4)நவாலி பிரசாத்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 300/= | 300/= | 1500/= | 24.00 |
| **3.பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம்** | | | | |
| 1)பண்.பொதுச்சந்தை (து.ச.வ. தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 2000/= | 250.00 |
| 2)பண்.பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 15.00 |
| 3) பண்.பொதுச்சந்தை | 1200/= | 300/= | 1500/= | 7500.00 |
| 4)பண்.பொதுச்சந்தை கருவாட்டுக்கடை இல.2 | 250/= | 300/= | 1500/= | 7500.00 |
| **4.பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்** | | | | |
| 1)மாதகல் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/= | 300/= | 1500/= | 10000.00 |
| 2)மாசியப்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 250/= | 300/= | 1500/= | 30000.00 |
| 3)பெரியவிளான் சந்தை (து.ச.வ.தரிப்பிடம் உட்பட) | - | 300/= | 1500/= | 5000.00 |

பிரால்சின் விக்டர்,
செயலாளர்,
வலி.தென்மேற்கு பிரதேசசபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச்செயலகம்,
மானிப்பாய்.

(5356)

# கிளி/இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மேற்படி நிகழ்வும், புதிய நிருவாகத் தெரிவும் எதிர்வரும் 05.12.2004. ஆம்திகதி பிற்பகல் 3.00மணிக்கு பாடசாலைப்பிரதானமண்டபத்தில நடைபெறும்.அனைத்துப் பழைய மாணவர்களையும் இந்நிகழ்வில் தவறாதுகலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

நிகழ்ச்சி ஒழுங்கமைப்புக் குழு

(5327)

# அரசாங்க அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்யப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைகளுக்கான கட்டட வரைபடம் தயாரிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட கட்டட கலைஞர் அல்லது ஒன்றியம் அல்லது நிறுவனம் போன்றவற்றிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யாழ்ப்பாண கச்சேரியின் பழைய பூங்காவை தாவரவியல் பூங்காவாக புனரமைத்தல்,
   வருங்கால அபிவிருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டு கட்டட வரைபடம் தயாரித்தல்.

2. நல்லூர் பிரதேச செயலகக் கட்டடம்
   நல்லூர் தமிழ் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் அமைத்தல்.

3. யாழ்ப்பாண கலாச்சார மண்டபம் அமைத்தல்
   யாழ்ப்பாண பொது நூலக கட்டடத்திற்கு அமைவாக தமிழ் கலாச்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டட வரைபடம் தயாரித்தல்.
   விபரமான கட்டட வரைபடம், பொறியியல் சார்பான வரைபடம் சமர்பிக்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வு திட்டப் பணிப்பாளரை கந்தோர் நாட்களில் சந்தித்து மேலும் விபரங்களையும், கட்டடம் சம்பந்தமான விபரங்களையும் சம்பந்தப்பட்ட கட்டடக் கலைஞர் அல்லது ஒன்றியம் அல்லது நிறுவனம் பெற்றுக்கொள்ளலாம். ஆரம்ப அடிப்படை வரைபடத்துடன் தமது கேள்விகளை 2004 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

செ. பத்மநாதன்
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்
01. 12. 2004

(5355)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர்

## செ.கதிர்காமநாதன்



பூநகரி கமநலசேவைகள் குழுவின் 1998/1999 காலப்பகுதியில் உறுப்பினராகவிருந்த திரு.செ.கதிர்காமநாதன் (கொல்லகுறிச்சி-பூநகரி) அவர்கள் 28.11.2004ஆம் திகதி இயற்கை எய்தியமையையிட்டு நாம் அவருக்குக்கண்ணீர்அஞ்சலி செலுத்துவதுடன், அவரது ஆத்மாசாந்தியடைய நாம் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்,
கமநல அபிவிருத்திச்சபை
உறுப்பினர்கள்,
பணியாட்கள்,
கமநல கேந்திர நிலையம்,
பூநகரி.

உதவி ஆணையாளர்,
பணியாட்கள்,
கமநல அபிவிருத்தித்திணைக்களம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(5328)

# ஐ.நா பாதுகாப்புச் சபையை விரிவாக்க உயர் மட்ட ஆராய்வுக் குழு பரிந்துரை

### -வீட்டோ அதிகாரத்தை விரிவாக்க நோக்கமில்லை

ஐ.நா பொதுச் செயலர் கொபி அனானினால் நியமிக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்தப் பரிந்துரைத்துள்ளது. ஆனால் புதிய நிரந்தர உறுப்பினர்களுக்கு வீட்டோ அதிகாரம் தர வேண்டாமென்றும் யோசனை கூறப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நியமிக்கப்பட்ட இக் குழு பயங்கரவாதத்தில் வரையறை மற்றும் ஐ.நாவின் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்த பரிந்துரைகளைச் சமர்பித்தது. நிரந்தர மற்றும் நிரந்தரமல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதா? அல்லது நிரந்தரமல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டும் அதிகரிப்பதா? என்ற முடிவை எடுக்க முடியாமல் அக்குழு இரண்டு யோசனைகளை வழங்கியுள்ளது.

இதில் முதலாவது யோசனையில் ஆபிரிக்கா, ஆசியா, பசுபிக், ஐரோப்பா அமெரிக்கா ஆகிய பகுதிகளிலிருந்து 6 நிரந்தர உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் 3 நிரந்தரமல்லாத உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் ஆகியவை அடங்கும்.

இரண்டாவது யோசனைப்படி நிரந்தரமல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் 4 வருட புதுப்பிக்கக் கூடிய பதவிக காலம் என்ற அடிப்படையில் 8 நிரந்தர உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளவும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.



கனடாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ்புஷ் ஒட்டாவாவில் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கைகுலுக்குகிறார்.

# அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தத்திற்கு இணங்கினால் நவீன இராணுவ தொழில்நுட்பங்களை பகிரத் தயார்

### -இந்தியாவுக்கு ரஷ்யா திடீர் நிபந்தனை

(மொஸ்கோ)

**அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் வரையில் இந்தியாவுக்குப் புதிதாக நவீன இராணுவத் தொழில்நுட்பங்களைத் தர இயலாது என ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சா செர்ஜி இவானோவ் கூறினார்.**

ரஷ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் டிசம்பர் 03ஆம் திகதி இந்தியாவுக்கு விஜயம் செய்கிறார். அதற்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக இந்தியா புறப்படும் முன்பு ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி இவானோவ் மொஸ்கோவில் அளித்த பேட்டியில் இந்தியாவுடன் அதி நவீன இராணுவத் தொழில்நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு அறிவுசார் சொத்துரிமைகளைப் பாதுகாக்கும் ஒப்பந்தம் அவசியம்.

அந்த ஒப்பந்தம் இல்லாமலிருப்பது ஒரு தடையாக உள்ளது. பாதுகாப்புத்துறை தொடர்பாக நாங்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றுவோம். ஆனால் அந்த ஒப்பந்தம் இல்லாமல் எதிர்காலத்தில் நவீன இராணுவத் தொழில்நுட்ப ஒத்துழைப்பு அடுத்து முன்னேற வாய்ப்பில்லை. ஒப்பந்தத்திற்கான முன்வரைபை ரஷ்யா 2ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவிடம் அளித்தது. ஆனால் அது தொடர்பாக இந்தியத்தரப்பிலிருந்து இன்னும் பரிந்துரைகள் கூட வரவில்லை.

ரஷ்யாவின் முன்னுரிமைக்குரிய நாடாக இராணுவத்துறை ஒத்துழைப்புக்குரிய நாடாக, இந்தியா இருந்து வருகிறது. சோவியத் யூனியன் இருந்த காலத்திலும் அவ்வாறுதான் இருந்தது. பலவற்றையும் சோவியத்யூனியன் இந்தியாவுக்கு இலவசமாக அளித்திருக்கிறது. ஆனால் இப்போது நிலமைகள் மாறிவிட்டன.

ரஷ்யா இன்று வேறுவிதமான நாடு. உயர் தொழில்நுட்பத்தை ஒப்பந்தம் இல்லாமல் இலவசமாக இன்று தர இயலாது. இந்த யதார்த்த நிலைமையைக் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம் என்று செர்ஜி இவானோவ் தெரிவித்துள்ளார்.

### 11 பொலிசார் காயம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானின் தென்மேற்குப் பகுதியில் நேற்று செச்சின் இஸ்லாமியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 11பொலிசார் காயமடைந்தனர். இதன்போது தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# இஸ்ரேல்-பலஸ்தீன பிரதமர்கள் விரைவில் சந்தித்துப் பேச முடிவு

(ரெல்சுவிங்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன்- பலஸ்தீன பிரதமர் முகமது அப்பாஸ் ஆகியோர் விரைவில் சந்தித்துப் பேச இருக்கின்றார்கள். பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று இரு பிரதமர்களும் அறிவித்துள்ளனர்.

ஏரியல் ஷரோன் கூறும்போது இஸ்ரேல் பிரதமர் தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன் நான் பிரதமர்ஆனால்தான் காசாப் பகுதியில் இருந்து இஸ்ரேல் படைகளையும், யூதக் குடியிருப்புகளையும் வாபஸ் பெறும் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று கூறி இருக்கின்றார்.

இந்த நிலையில் ஏரியல் ஷரோனின் இந்தத் திட்டத்தை எதிர்த்து அவருக்கு கொலைப்பயமுறுத்தல் வந்துள்ளது.

### விமானச் சிதைவுகள் கண்டுபிடிப்பு

(காபூல்)

மத்திய ஆப்கானிஸ்தான் மலைப பிரதேசத்தில் கடந்தவார இறுதியில் விழுந்து நொருங்கிய அமெரிக்க விமானத்தின் சிதைவுகளைத் தேடுதற் குழுக்கள் கண்டுபிடித்துள்ளன. அந்த விமானத்தில் சென்ற 6 பேரும் விபத்தில் பலியானார்கள் என்றும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# முஷாரப் இரு பதவிகளையும் வகிக்கும் சட்டத்திற்கு அங்கீகாரம்

### -செயல் அதிபர் கையெழுத்தால் சர்ச்சை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் தலைமை இராணுவத் தளபதிப் பொறுப்பையும் சேர்த்துக் கவனிக்க வகை செய்யும் சர்ச்சைக்குரிய சட்டத் திருத்த பிரேரணையில் அந்நாட்டு செயல் அதிபர் முகமது சூம்ரோ கையெழுத்திட்டுள்ளார். இதற்கு அந் நாட்டு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.


இரு பதவிகளிலும் நீடிப்பதற்கு ஏற்றவாறு பாராளுமன்றில் சட்ட திருத்தப் பிரேரணை கொண்டு வரப் பட்டது. இரு அவைகளிலும் இந்தப் பிரேரணை நிறைவேற்றப் பட்டது. இந்நிலையில் பாராளுமன்ற மேலவைத் தலைவரும் தற்போது பாகிஸ்தான் செயல் அதிபராக இருந்துவரும் முகமது சூம்ரோ நேற்று முன்தினம் இந்தச் சட்ட திருத்த பிரேரணையில் கையெழுத் திட்டார்.

தற்போது முஷாரப் லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளதால் மேலவைத் தலைவரான முகமது சூம்ரோ செயல் அதிபராக பொறுப் பேற்றுள்ளார். எனவே சனாதிபதிக்குப் பதிலாக இந்தச் சட்ட திருத்தப் பிரேரணையில் அவர் கையெழுத்திட்டார்.

சனாதிபதி முஷாரப்பின் பதவிக் காலம் வரும் 2007 ஆம் ஆண்டு வரை உள்ளது. அதுவரை அவர் இராணுவத் தலைமை தளபதிப் பொறுப்பையும் சேர்த்து வகிப்பார் என்று கருதப்படுகிறது.


# பயணிகள் விமானம் தரையில் மோதிவிபத்து இந்தோனேசியாவில் 31பேர் பலி; 61பேர் காயம்!

(ஜகார்த்தா)



இந்தோனேசியாவில் நேற்று முன் தினம் பயணிகள் விமானம் தரையிறங்கும்போது தரையில் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 31 பேர் இறந்தனர். 61 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தோனேசியாவில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. மத்திய ஜாவா எனுமிடத்தில் உள்ள சோலோ நகர். ஜகார்த்தாவிலிருந்து புறப்பட்ட 'லயன் ஏர்' ஜெட் விமானம் நேற்று முன்தினம் இரவு சோலோ நகர விமான நிலையத்திற்கு வந்தது. அதில் 153 பயணி கள் இருந்தனர். சோலோநகர் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது பலத்தமழை காரணமாக விமான ஓடுதளத்தில் விமானம் வழுக்கிச் சென்றது. பின்னர் விமானத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதால்,தரையில் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 31 பேர் இறந்தனர். 61 பேர் படுகாமடைந்தனர். விமானத்தின் ஒரு இறக்கை தனியே உடைந்து விழுந்தது. விமானத்தில் உடற்பகுதி பலமாகப் பாதிக்கப்பட்டது.



ஈராக்கில் மோசுல் நகரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்கா முதலாவது பட்டாலியனின் 24ஆவது பிரிவு இராணு வத்தினரையும், பாக்தாத்தில் முன்னணி படைமுகாம் ஒன்றிலிருந்து 120மி.மீ மோட்டார் மூலம் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்க விசேட படைவீரரையும், பாக்தாத்துக்கு 112 மைல்களுக்கு அப்பாலுள்ள பாய்ஜியில் நேற்று முன்தினம் கார்க்குண்டு வெடித்ததில் காயப்பட்ட ஈராக்கிய பொலிஸ்வீரர் சிகிச்சை பெற்றுவருவதையும் படங்களில் காணலாம்.

### பங்களாதேஷ் பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 45 வீத ஒதுக்கீடு

(டாக்கா)

பாராளுமன்றத்தில் பெண்களுக்கு 45 இடங்களை ஒதுக்கீடு செய்யும் சட்டத்தை பங்களாதேஷ் அமுற்படுத்தியுள்ளது. இந்த 45 இடங்களுக்கும் பெண் எம்.பி.க்களை பாராளுமன்றத்தின் தற்போதைய எம்.பி.கள்தான் தேர்ந்தெடுப்பார்கள். இதன்படி, பிரதமர் கலீதா ஜியாவின் வங்கதேச தேசியக கட்சித் தலைமையிலான 4 கட்சி இஸ்லாமியக் கூட்டணிக்கு 33 இடங்களும், எதிர்க்கட்சியான அவாமி லீகுக்கு 9 இடங்களும், முன்னாள் சனாதிபதி எர்ஷாத்தின் கட்சியான ஜதியா கட்சிக்கு 2 இடங்களும், சுயேச்சைக்கு ஒரு இடமும் கிடைக்கும்.

# ஒதியமலை படுகொலை நினைவு நாள் இன்று

மணலாறு-ஒதியமலைக் கிராமத்தில் சிங்களப் படையினரால் முப்பத்திரெண்டு பொது மக்கள் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்டு இன்று இருபதாண்டுகள் பூர்த்தியாகியுள்ளது.

இரண்டு தசாப்தங்கள் ஆகிவிட்ட இந்தப் படுகொலைச் சம்வம் தமிழீழத்தில் சிங்களப்படைகள் மேற்கொண்ட படுகொலைகளின் தொடராகும். அந்த வரிசையில் தற்போதும் கூட சிங்களப் படைகளின் வெறியாட்டம் தொடர்கிறது.

இயற்கை எழில் கொஞ்சும் வயல்வெளி கால்நடைகளுக்கான மேய்ச்சல்நிலம் அதனையண்டியகுளம் அதனருகே ஒதியமரங்களை சோலையாகக்கொண்ட அந்த கிராமம் தான் ஒதிய மலைக்கிராமம்.

பெரிய குளத்தை வடக்காகவும், தண்ணிமுறிப்புகுள அலைகரையை கிழக்காகவும், தனிக்கலக் கிராமத்தை மேற்குப் பக்கமாகவும் நெடுங்கேணி-ஒலுமடுவை தெற்காகவும் கொண்ட இக்கிராமம் பொருளாதார வளத்தையும் பாடசாலை, கிராம அபிவிருத்திச் சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் எனப் பல்வேறு பொது அமைப்புகளையும் கொண்டிருந்தது.

மொழி, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை வாழ்வில் பற்றி வாழும் இம்மக்கள் மண்பற்றை முக்கியமாக கருதிச் செயற்பட்னர். இதனால்தான் சிறிலங்கா வெறியர் இவர்கள் மீது தமது கொடூரத் தாக்குதலை நடத்தினர். ஒதியமலைக்கருகிலுள்ள சிலோன் தியேட்டர், காக்காபோட், கென்பாம், டொலர்பாம் கிராமங்கள் தமிழர்கள் வாழ்ந்த பாரம்பரிய பிரதேசமாகும். இப்பகுதியை ஏற்கனவே ஆக்கிரமித்து முகாம் அமைத்திருந்த சிங்களப்படைகள் 1984ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஒதியமலைக்கிராமத்திற்குள் நுழைந்தனர்.

அடுத்தநாள் ஞாயிறு அதிகாலை 5.00 மணியளவில் ஒதியமலைக்கு அருகிலுள்ள பட்டிக்குடியிருப்புக் கிராமத்தில் சரமாரியாக வெடிச்சத்தங்கள் கேட்டன. இதனையடுத்து ஒதியமலைக் கிராமவாசிகள் சிலர் அங்கு நிலைமையை அறியச் சென்றனர். அதில் ஒருவர் பட்டிக் குடியிருப்பில் தங்கியிருந்த இராணுவத்திடம் பிடிபட ஏனையோர் காட்டினுள் தப்பியோடினர். அங்கு இவருடன் சேர்த்து 31 பேர் இராணுவ நரபலி நாய்களால் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வேளை அவ்வழியால் வந்து கொண்டிருந்த உழவு இயந்திரத்தையும், அதன் சாரதியையும் கைது செய்து ஒதியமலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்திற்குக் கொண்டு சென்றனர். அங்கு வைத்து இருபத்தேழு பேரையும் தனித்தனியாகவும், இருவர், மூவர் என சேர்த்து ஒன்றாகப் பிணைத்து தமது வாகனங்களில் ஏற்றி கென்பாம் முகாமிற்குக் கொண்டு சென்றனர். சாரதி உள்ளிட்ட ஐந்து பேரையும் உழவு இயந்திரப்பெட்டியினுள் கைகள் கட்டப்பட்ட நிலையில் குப்புறப்படுக்கவிட்டு அவர்கள் மேல் உழவு இயந்திர பெட்டிக் கதவுகளை போட்டு இராணுவமும் அவர்கள் மீது இருந்து கென்பாம் நோக்கிச் சென்றனர். அங்கு வைத்து தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் உழவு இயந்திரப் பெட்டியுடன் எரியூட்டப்பட்ட நிலையில் கிடக்க மக்கள் கண்டனர்.

அன்று 32 பேரும் அடுக்கி வைக்கப்பட்டு எரிக்கப்பட்ட அவலத்தைப் பார்த்த கிராமமக்கள் கதறி அழுதனர்.

23.12.1984 அன்று மீண்டும் இனவெறி பிடித்த சிங்கள இராணுவம் பெரியகுள கிராமத்திற் புகுந்தது. அன்று பெரிய குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நேரு உட்பட வேறு சிலரையும் படுகொலை செய்தனர். இதனையடுத்து ஒதியமலை பட்டிக்குடியிருப்பு டொலர்பாம், கென்பாம், காக்கா போட் ஆகிய கிராமமக்கள் இடம் பெயர்ந்தனர்.

தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களை ஆக்கிரமித்து அங்கிருந்த தமிழர்களைப் படுகொலை செய்து அவர்களது சொத்துக்களைச் சூறையாடி அம்மக்களை இடம் பெயரச் செய்து விட்டு அப்பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியிருத்தி அவர்களுக்குச் சட்டமுரணான வகையில் காணி உறுதிகளையும், மேலும் பல சலுகைகளையும் வழங்கி அவர்களின் பாதுகாப்பிற்கு இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு அது போதாதென்று பொதுமக்களுக்கும் அரச படையினரால் ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நட[illegible]டிக்கையானது சிங்கள இனவாத ஆட்[illegible]யாளர்களினால் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகும். இது தடுக்கப்படவேண்டுமாயின் தமிழர்கள் விழிப்புடன் இருப்பது அவசியமாகும்.

**க.கவியழகன்**
**[ஒட்டுசுட்டான் செய்தியாளர்]**

---

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப்பயிற்சி நெறி

(அலுவலக செய்தியாளர்)

மாகாண சிறுவர் செயற்திட்டத்தின் கீழ் கிளிநொச்சியில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சி நெறி ஒன்று நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வரும் முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கின்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடாகவும், இதுவரை பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட இப்பயிற்சி நெறியானது இரண்டு கட்டங்களாக நடை பெற்றது. இதன் முதற் கட்டம் கடந்த 19 ஆம் திகதி ஆரம்பித்து 21ஆம் திகதி நிறைவு பெற, இரண்டாவது கட்டம் 28 ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் முடிவடைந்தது. கிளிநொச்சி தொண்டமான் நகர் பொது நோக்கு மண்டபத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 3மணிவரை நடைபெற்ற இப்பயிற்சி நெறியின் ஒவ்வொரு கடடங்களிலும் தலா 25 ஆசிரியர்கள் வீதம் பயற்சி பெற்றனர்.

கிளிநொச்சி கல்வி வலயமும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்த அனுசரணையில் கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட இப்பயிற்சியின் ஆரம்ப நாளன்று கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அரியரத்தினம், தமிழ் ஆசிரிய ஆலோசகர் திருமதி. மதுரநாயகம், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இ.ராஜன், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் நிலா, கிளிநொச்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் நி.சின்னராசா, கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் கெங்காதரன், சங்கீத,நடனஆசிரியை லோகேஸ்வரி ஆகியோர் உத்தியோகபூர்வமாகக் கலந்து கொண்டு பயிற்சிகளை ஆரம்பித்து வைக்க. கிளிநொச்சி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.சிவநாதன் அவர்கள் பயிற்சிகளை நெறிப்படுத்தி நடத்தினார். (ச)



---

-உலக உணவுத்திட்டத்தின் கீழ்-

## முல்லை மாவட்டத்தில் 94.கி.மீ வீதி புனரமைப்பு

(முல்லை)

இவ்வருடம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உலக உணவுத்திட்டத்தில் 94 கி.மீ வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத்திட்ட இணைப்பாளர் தெரிவித்தார். அடுத்த வருடமும் முழுமையாக வேலைகளை நிறைவு செய்து தந்த பிரதேசசபைகளுக்கு வீதி திருத்த நிதி ஒதுக்கப்போவதாகவும் இணைப்பாளர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் கிராமங்களின் அநேகமான மக்கள் பாவனைக்குரிய வீதிகள் திருத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (20)

## நிறுத்தலளவைக் கருவிகளுக்கு புதுக்குடியிருப்பில் முத்திரையிடல்

புதுக்குடியிருப்புப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு 2004.12.02 (இன்று) ஆம் நாளிலிருந்து 2004.12.15 ஆம் நாள்வரை புதுக்குடியிருப்பு அங்காடித்தெருவில் அமைந்துள்ள நிறுத்தலளவைப்பிரிவுச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

நிறுத்தலளவைக் கருவிகளைப்பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளில் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுத்தலளவைப்பிரிவு வருவாய்ப் பகுதியினர் வேண்டிக் கொள்கின்றனர்.

## குமுழமுனையில் மேய்ச்சல் தரைக்கு இடமொதுக்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரை ஒதுக்கப்பட வேண்டுமென விவசாயிகள் கால்நடைவளர்ப்போர் [illegible] வேண்டுகோளுக்கமைவாக முல்லைத்[illegible] குமுழமுனையில் மேய்ச்சல் தரை 100 ஏக்கரில் அமை[illegible]தற்கான காணியை உறுதிப்படுத்தித்தருமாறு கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் சோதிநாதன் அவர்களை முல்லை மாவட்ட அரசஅதிபர் கேட்டுக் கொண்டார். முதலாவதான மேய்ச்சல் தரை குமுழமுனையில் அமைக்கப்படவுள்ளதாகவும் அதனைத் தொடர்ந்து மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் அமைக்க முயற்சி எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்

(20)

## தண்ணி முறிப்புக் குள பிரதேசத்தில் டிசம்-05 இறுதி விதைப்புத் திகதி

(முல்லைத்தீவு)

தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் நெற்பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகள் இதுவரை 1600 ஏக்கர் பயிர்ச் செய்கையினை மேற்கொண்டுள்ளனர்.

600 ஏக்கர் நிலம் இதுவரை நெற் செய்கை மேற்கொள்ளப்படவில்லை. அவர்களுக்கான இறுதி விதைப்புத் திகதி எதிர்வரும் 05.12.2004 என முல்லை மாவட்ட விவசாயக் குழு கலந்துரையாடலில் எடுக்கப்பட்டு ஏக மனதாக தீர்மானிக்கப்பட்டதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20)

## முல்லை தபால் நிலையங்களுக்கான கட்டடம் அமைக்கத்திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தின் தபால் அலுவலகங்களிற்கான கட்டடம் அமைப்பதற்கான திட்டம் தயாரிக்கும் நடவடிக்கையினை முல்லை மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டு வருகின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்த தபால் நிலையம், உபதபால் நிலையங்கள் அனைத்தும் விமானக்குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்களாலும் உடைந்து சிதைந்துள்ளன. அனேகமான தபால் நிலையங்கள் தற்காலிகமாக தனியார் வீடுகளில் இயங்கிவருகின்றது. இதனால் அமைச்சருடனான சந்திப்பில் இப்பிரச்சினை குறித்து அரச அதிபர் எடுத்துக் கூறியதை அடுத்து இத்திட்டம் தயாரித்து தருமாறு பணித்ததை அடுத்தே இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் தெரிவித்தார். (20)

## முல்லை மாவட்டத்திற்கான வான்லை அவதான நிலையமில்லை

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான வானிலை அவதான நிலையம் முல்லைத்தீவில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக சிதைவடைந்துள்ளது.

இதனை மீளப் புனரமைக்காததினால் விவசாயிகள், மீனவர்கள் எனப் பலர் பல துன்பங்களை எதிர்கொள்கின்றனர். முல்லைத்தீவு கரைச்சிக் குடியிருப்புப் பகுதியில் இந்த நிலையம் 1990 ஆம் ஆண்டிற்கு முன்பு அமைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (20)

# தென்மராட்சி கரையோரப் பகுதிகளில் சிறிலங்கா படையினர் கெடுபிடி அதிகரிப்பு!

## மீனவ சங்கங்கள் கடும் விசனம்

(வடமராட்சி)

**தென்மராட்சியின் கச்சாய் மற்றும் அதனை அண்டிய மீன்பிடிக் கிராமங்களில் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மீதான படைத் தரப்பின் கெடுபிடிகள் மீண்டும் அதிகரித்திருப்பதாக குற்றம் சாட்டப் படுகின்றது.**

குறிப்பாக கச்சாய் பகுதியினைச் சேர்ந்த நான்கு மீனவர்களிற்கான மீன்பிடி அனுமதியை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மறுத்துள்ள படைத்தரப்பு தம்மால் வழங்கப்பட்ட மீன்பிடி அனுமதி அட்டைகளையும் பறித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. இது தொடர்பாக இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் கவனத்திற்கு தாம் கொண்டுவந்துள்ளதாகக் கூறும் கச்சாய் மீனவசங்கத் தலைவர் அமிர்தலிங்கம் இவ்விடயத்தில் படைஅதிகாரிகளிடம் முறையிட்ட போதிலும் தீர்வு ஏதும் கிட்டவில்லை எனவும் தெரிவிக்கின்றார்.

குறிப்பாக கரையோரப் பகுதியில் உள்ள காவலரண்களில் கடமையாற்றும் படையினரது பல விதமான கெடுபிடிகளுக்கு உடன்பட மறுக்கும் மீனவர்கள் மீது தாக்குதல்களையும் படையினர் மேற்கொண்டு வருவதாகவும் அத்துடன் அவர்களால் பிடிக்கப்படும் மீன்கள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டுகின்றார்.

இக்கடற்பரப்பில் படையினரால் அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட தூர எல்லையினுள் மட்டுமே மீன்பிடிக்க வேண்டும் எனவும் அத்துடன் பகல் பொழுதுகளில் மட்டுமே மீன் பிடியில் ஈடுபட முடியும் எனவும் கூறி வரும் படைத்தரப்பு மறுபுறத்தே பிடிக்கப்பட்டு வரும் மீன்களையும் பறித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

இந்நிலையில் படையினரது நடவடிக்கைக்கு உடன்பட மறுக்கும் மீனவர்கள் தாக்கப்படுவதாகவும் குறிப்பாகப் படையினர் போதிய மீனினை வழங்க மறுத்ததாக கூறி நேற்று முன்தினம் பொன்னம்பலம் சுதன் எனும் மீனவர் அப்பகுதி படை அதிகாரியால் தாக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (27)

### மாணவன் காயம்

வீதியால் நடந்து சென்ற மாணவன் மீது பின்னால் வந்த உந்துருளி மோதியதில் மாணவன் படுகாய மடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் சேர்க்கப் பட்டுள்ளார். மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பிரசன்னா (வயது-9) என்பவரே நுணாவில் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்த போது இவ் விபத்து ஏற்பட்டது.(28)

## வெடிபொருட்களை அகற்றாது படையினர் வெளியேற்றம்!

(தென்மராட்சி)

கொடிகாமம் கோயிலாமனையில் கடந்த நான்கு ஆண்டுகளாக செயற்பட்டு வந்த சிறிலங்கா இராணுவத்தின் பிரதான ஆட்லறி மற்றும் படைத்தளம் கடந்த பத்து நாட்களுக்கு முன்னால் இப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டது என்றும் படை முகாம் அமைக்கப்பட்ட ஐம்பது ஏக்கர் நிலப்பகுதியில் புதைக்கப்பட்ட வெடிபொருட்களை சிறிலங்காப் படைகள் அகற்றாமல் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதனால், இப்பகுதியில் வாழும் மீளக் குடியமர்ந்த மக்கள் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். இது குறித்து கருத்துத் தெரிவித்த இப்பகுதியைச் சேர்ந்த ஒருவர், தமிழர்கள் அழிய வேண்டும் என சிங்களப் படைகள் எண்ணுகின்றனர். அதனாலேயே இப்பகுதியில் மக்களின் நிலங்களில் புதைக்கப்பட்ட பெருந்தொகையான வெடிபொருட்களை சிங்களப் படைகள் அகற்றாமல் வேண்டும் என்றே விட்டுச் சென்றிருக்கிறது என்றார். (28)

## சொந்த வீட்டில் மீள்குடியமர போராடியவர் மனநிலை பாதிக்கப்பட்டு மரணம்!

(தென்மராட்சி)

உசனில் சிறிலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட தன்னுடைய வீட்டை மீட்டுத்தரக் கோரி, பல மாதங்களாக போராடி வந்த ஆசிரியர் முத்துப்பிள்ளை மார்க்கண்டு என்பவர் மனநிலை பாதிக்கப்பட்டு மரணம் அடைந்துள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னால் மனநிலை பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த உசன் இராமநாதன் மகாவித்தியாலய இளைப்பாறிய ஆசிரியர், மரணம் அடைந்து இருப்பதாகத் தெரியவருகிறது. தன்னுடைய அடிப்படை உரிமைகளுக்காய், தன்னுடைய சொந்த வீட்டில் சுயமாக வாழ்ந்திட படைகளை விலக்கி தனக்கு வாழ வழிவிடுங்கள் என்று தனியாகவும் மக்களுடன் இணைந்தும் போராடி வந்த இவரின் ஆசைக் கனவுகள் அடக்குமுறை சிறிலங்கா அரசின் முன்னால் தோற்றுப்போய் மனவிரக்தியுற்று மனநிலை பாதித்து மரணம் அடைந்திருப்பதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இச்சம்பவம் இப்பகுதியை பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. (28)

## சந்திரபுரத்தில் 450 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின

### உதவி வழங்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பகுதி சமீபத்தில் பெய்த பெரும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், இப்பகுதியில் உள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.


இது குறித்து பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் நிலைப்பாடுகள் குறித்தும், பாதிக்கப்பட்ட தங்களுடைய உடமைகள் குறித்தும் தங்களின் அவல நிலை குறித்தும் கஷ்ரங்கள் குறித்தும் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். (28)

## நாவற்குழி ம.வி. வீதியை புனரமைக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

கடந்த பல வருடங்களாக புனரமைப்பட்டாமல் உள்ள நாவற்குழி மகாவித்தியாலய வீதியை உடனடியாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பாடசாலை நிர்வாகம் கோரியுள்ளது.

இப்பிரதேசத்தில் மக்கள் செறிந்து வாழும் பகுதியாகவும் மயானம் மற்றும் துறை முகம் செல்லும் பிரதான வீதியாகவும் உள்ள இச்சாலை இப்பகுதியின் பிரதான சாலையாகவுள்ளதால் சம்பந்தப்பட்ட நிர்வாகப்பிரிவினர் பாடசாலை மாணவர்களின் நலன் கருதியும், இப்பகுதி மக்களின் நன்மை கருதியும், உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாடசாலையின் அதிபர் திருமதி.மேகலிங்கம் கோரியுள்ளார். (28)



கைதடி சமுர்த்தி வங்கி சரியான நேரத்துக்கு திறக்கப்படுவதில்லை என்றும் இதனால் மக்கள் பணி முழுமையாக பாதிக்கப்படுவதாகவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து அறிந்து கொள்வதற்காக கடந்த திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்கு சென்ற பொழுதும் வங்கியின் கதவுகள்பூட்டப்பட்டு இருந்ததையும் ஊழியர்கள் எவரும் அதுவரை பணிபுரிய அலுவலகங்களுக்கு வரவில்லை என்பதும் தெரியவந்துள்ளது. இது குறித்து இப்பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கையில் வங்கி அலுவலர்கள் நினைத்த பொழுதில் வருவதும் செல்வதும் தான் இன்று நடந்து வருவதாகக் கூறினர். (28)

## இளைஞர்கள் சமுதாய சீரழிவில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது

### -கைதடிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர்

(தென்மராட்சி)

நாவற்குழி மற்றும் கைதடிப் பிரதேசங்களில் சமுதாயச் சீரழிவில் மற்றும் கலாச்சாரத்துக்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் இளைஞர் சமுதாயம் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என்று இப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் முரளி தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களாக பொது மக்களிடம் இருந்து இப்படியான சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகள் பல வந்து கொண்டு இருப்பதால் இது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் என்றும் நாவற்குழிச் சந்தியில் மாலை வேளைகளில் கூடும் இளைஞர் குழுக்களால் சமீப காலமாக பல பிரச்சினைகள் தோன்றி இருப்பதாகவும் இப்படியான தவறான பாதைகளில் செல்லும் இளைஞர்களை நேர்த்தியான பாதைகளில் செல்ல பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நல்ல சமூக பிரஜைகளை உருவாக்குவதற்காக இவ் இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் தெரித்தார் (28)

## அரியாலையில் கிராம அபிவிருத்தித் திட்டம் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலையில் கிராம அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது. நிகொட் திட்டத்தின் 65 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ள இத்திட்டத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் அடிப்படையில் கிராம மக்களின் சுயதொழில் முயற்சிகளை மேம்படுத்தல், வீடமைப்புத் திட்டம், குடிநீர் வழங்கல் நடவடிக்கைகள், விளையாட்டுக் கழகங்களைப் புனரமைத்தல், முன்பள்ளி களைப் புனரமைத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (33)

## பருத்தித்துறை கடற்கரையோர வெளிச்ச வீட்டை புனரமைக்க நிதி கிடைத்தும் அரசு பின்னடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி பருத்தித்துறை கடற்கரை ஓரத்தில் உள்ள வெளிச்ச வீட்டினைப் புனரமைப்புச் செய்வதற்கான நிதி உதவியினை வழங்குவதற்கு ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் முன்வந்துள்ள போதிலும் அதனை புனரமைப்புச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

மேற்படி வெளிச்ச வீட்டினை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யும்பணியினை பொறுப் பேற்று நிர்வகிப்பதற்கு கடற்றொழில் அமைச்சோ அல்லது கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்களமோ முன் வராமையினாலேயே இவ்வாறான நிலை ஏற்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதனால் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

# இனப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு காணாது

# அரசியலமைப்பை மாற்றுவது கடினம்

ராவய சிங்கள நாளிதழில்
காலிங்க
மொழியாக்கம் அ.சக்திவேல்

அடுத்த தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியை கைப்பற்றுவதற்கு இயலாத வகையில் செய்வதற்கு ஜே.வி.பி.பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இது சந்திரிகாவின் அரசியல் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் திட்டமாக தற்பொழுது அமைந்துள்ளது. மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றாமல் இருப்பதற்கு ஜே.வி.பி.யும், சனாதிபதியும் இணைந்து முழு முயற்சியில் ஈடுபட்ட வண்ணம் உள்ளனர். இவ்வாறு அவர்கள் செயற்படுவார்களானால் நாட்டில் மாபெரும் அரசியல் கிளர்ச்சி ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

சனாதிபதி; இரண்டாவது பதவிக்காலம் முடிந்த பின் மூன்றாவது தடவை எப்படியாவது தான் சனாதிபதியாக வேண்டும் என்ற திட்டத்துடன் செயலில் இறங்கியுள்ளார். சனாதிபதியின் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஜே.வி.பி.யின் ஆதரவு இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாதென ஜே.வி.பி நன்கு உணர்ந்துள்ளது. இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முழு அதிகாரங்களையும் ஜே.வி.பி கைப்பற்றும் நோக்கத்துடன் சந்திரிகா அம்மையாரை தனது வலைக்குள் சிக்கவைத் துள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாச, காமினிதிசாநாயக்க, லலித்அத்துலத் முதலி போன்ற பலம் வாய்ந்த தலைவர்களுடன் மோதுவது கடினம். ஆனால் ரணில் விக்கிரமசிங்க போன்ற ஒரு மென் போக்காளருடன் மோதலில் ஈடுபட்டுள்ளோம் என்று சனாதிபதிக்கும், ஜே.வி.பி. கட்சியினருக்கும் தெரியும். இந்த இருவரும் இணைந்து கைகளை நெருப்பில் சுட்டுக் கொள்ளாமல் வெகு இலகுவாக வெற்றி கொண்டனர். பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் வரை பாராளுமன்றத்தைக் கலைத்துவிட மாட்டோம் என்று சனாதிபதி பாராளுமன்றத்தில் எழுத்து மூலமாக அறிக்கை வெளியிட்டு விட்டுப் பின்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டார். அதை ஐக்கிய தேசியக் கட்சியினர் பார்த்துக்கொண்டு இருந்தார்களே தவிர அதற்கு எதிராக ரணில் விக்கிரமசிங்கவால் எதுவும் செய்ய முடியவில்லை. இதனால் இம்முறை தேர்தலில் வெற்றி பெறுவதற்குச் சந்தர்ப்பங்கள் இருந்தும் அவர் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டு விட்டார். இது ரணிலின் பலவீனத்தையே காட்டுகிறது. சனாதிபதியும், ஜே.வி.பி.யும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கும் பொழுது ரணில் விக்கிரமசிங்க இவர்களின் தீர்ப்புகளுக்கு எதிராக எந்தத் தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றார். சனாதிபதியின் இந்தக் கபட நாடகங்களுக்குப் பிரதம நீதியரசரின் அனுசரணையும் கிடைத்துள்ளது. தான் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தாலும் விகிதாசாரத் தேர்தல் முறையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றி பெற முடியாது என்பதை சந்திரிகா நன்குணர்ந்துள்ளார். மக்களின் தீர்ப்பு இல்லாமல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தேர்தல் முறையை மாற்றும் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சி செய்தார். மூன்றில் இரண்டு பலத்தைப் பெறுவதற்கு 9பாராளுமன்ற அங்கத்தவர்கள் தேவைப்பட்டனர். இந்த 9 அங்கத்தவர்களையும் ஐக்கிய தேசியக்கட்சியிடமிருந்தே பெற வேண்டும். இந்த நாடகத்திற்குப் பிரதம நீதியரசரின் பங்கு சனாதிபதிக்குக் கிடைத்தது.

அதிகாரக்கட்டுப்பாட்டுக்கு ஏற்றுக் கொள்ள முடியாத தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பெற்றுக் கொள்வதற்கு மாறாக மக்கள் தீர்ப்பு அவசியம் என்றாலும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டே அதிகப் பெரும்பான்மையை பெற்றுத் தேர்தல் முறையைச் சட்டமாக்குவதற்று மேல் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்று ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 9 அங்கத்தவர்களின் உதவியுடன் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டு புதிய தேர்தல் முறைப்படி தேர்தலில் போட்டியிட்டுப் பெறும் வெற்றியை வைத்துக்கொண்டு மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் சனாதிபதி தற்பொழுது செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றார். ஆனால் ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலைகொடுத்து வாங்கப்பட்ட 9 அங்கத்தவர்களில் ஒருவர் இந்த இரகசியத்தை ஐக்கிய தேசியக் கட்சியிடம் வெளியிட்டுள் ளார். ஆகவே சனாதிபதியின் இத்திட்டம் தோல்வி கண்டுள்ளது. இந்த இரகசியத்தை தினேஷ்தொடங்கொட ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவிடம் வெளியிட்டுள்ளார். இவ்ர் இதற்காக அரசிடமிருந்து ஒரு தொகைப்பணத்தையும் பெற்றுள்ளார். ஆகவே இதில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரையும் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூருக்கு அனுப்பியதால் சனாதிபதியின் திட்டம் நிறைவேறாத படியால் பழைய தேர்தல் முறைப்படி பாராளுமன்றத்தை சனாதிபதி கலைத்தார்.

சனாதிபதியின் முயற்சி தோல்வியுற்றதும் அரசியல் யாப்பில் 17ஆவது சரத்தை மாற்றுவதற்காக மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இந்தக்குழுவில் பிரதம நீதியரசர் தலைமை தாங்கியதுடன் ஏனைய உயர்நீதிமன்ற சிரேஷ்ட நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். இந்தப் 17ஆவது சரத்திலுள்ள இந்தச் சட்டத்தை நன்கு பயின்றவர்களினால் மாற்றியமைக்க முடியாது. ஏனையோர்கள் இதில் பங்கெடுப்பதை உயர் நீதிமன்றம் விரும்பவில்லை. மார்க் பர்னாந்து, ரஞ்சித்அமரசிங்க, ரஞ்சித்திசரத்ன போன்றவர்கள் இச்சட்டத்தை அலசி ஆராய்ந்து முடிவெடுக்கும் ஆற்றலுடையவர்கள் இவர்களையும் இச் சபையில் இணைத்துக் கொள்ளவில்லை. இது சம்பந்தமாக எதிர்க்கட்சித் தலைவர் வாய்திறக்கவில்லை சம்பந்தப்பட்ட நீதிபதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அவர் அத் தருணத்தில் இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க தவறியபடியால் சட்டம் அரசியலுக்கு அடிமையாகி விட்டது. பின் பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றத்தில் குற்றப் பிரேரணை கொண்டு வந்து அவரைப் பதவியில் இருந்து நீக்கப்போவதாக எதிர்க்கட்சித் தலைவர் பிரச்சாரங்களை மேற்கொண்டார். பின் இவரின் வீராப்புப் பேச்சும் சவப்பெட்டியில் போடப்பட்டது. பாராளுமன்றத்தில் இதைப்பற்றி குறைந்த பட்சம் ஒரு விவாதத்தையாவது இவர் மேற்கொள்ளவில்லை. இவர்களின் பிழைகளை பார்த்துக் கொண்டு வெறுமனே இருந்தபடியால் அவர்களின் பிழைகள் யாவும் மறைக்கப்பட்டு, மேலும் பிழைகள் செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டது.

தற்போது சனாதிபதிக்கு தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பிரதம நீதியரசரின் தயவு தேவைப்படுகிறது. இப்பொழுது சனாதிபதியின் திட்டம் 2000ஆம் ஆண்டுகளுக்கு முன்னதாக எப்படி அவர் தனது அரசியல் காய் நகர்த்தலை மேற்கொள்வதில் தோல்வியை தழுவிக் கொண்டாரோ அதற்கும் தற்பொழுது ஆரம்பித்திருக்கும் திட்டத்திற்கும் வேறுபாடுகள் கிடையாது. அரசியல் யாப்பு சபை ஒன்றை ஏற்படுத்தி அந்தச் சபையினால் வெளியிடும் கருத்துக்களைச் சர்வசன வாக்கெடுப்புக்கு விட்டு அதன் பலாபலன்களை மேல் நீதிமன்ற தீர்ப்பின் மூலமாக மூன்றில் இரண்டு அதிக பெரும்பாண்மை இல்லாமல் சனாதிபதி அதிகாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி மீண்டும் சனாதிபதி பதவியில் இருப்பதற்கே முழு மூச்சுடன் செயலில் இறங்கி உள்ளார்.

ஆனால் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஜே.வி.பி.யின் அனுசரனை சனாதிபதிக்கு தேவைப்படுகிறது. இதை எதிர்ப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்திற்கு முடியாதென்பதை சனாதிபதியும் ஜே.வி.பி.யினரும் நன்கு உணர்ந்துள்ளனர். இவற்றை தடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சிறந்த தலைவர் தேவை. அப்படியானால் ரணில் விக்கரமசிங்கவை ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப் பீடத்தில் இருந்து நீக்கி புதிய தலைவரை தேர்ந்தெடுப்பது. மிக அவசியமாகும் முதுகெலும்பு உள்ள தலை வர்கள் தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியில் இல்லை. எனவே ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடாமல் இருப்பதற்கு தற்போதைய தலைவர் ரணில்விக்கிரமசிங்கவை நீக்கி புதிய தலைவரை நியமிப்பது மிக அவசியம்

சந்திரிகா நினைப்பதை போல் யாப்பை மாற்றுவது சுலபமான காரியம் அல்ல. தனது வேலைத் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு திறமையான தலைமைத்துவம் ஐக்கிய தேசியக் கட்சியில் கிடையாது. ஆனாலும் பொருளாதாரத்தில் நாடு பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. இதைப்பயன் படுத்தி ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்க எதிராக பெரிய ஆர்ப்பாட்டங்களை செய்யும், மற்றது. ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியில் ஏற்பட்டிருக்கும் கட்சி உட்பூசல்களும் அரசு எதிர்ப்புக்கு ஒரு சாதகமாக அமையலாம். மேலும் கட்சி உட்பூசல்கள் அதிகரித்தால் கட்சி பிளவுபடும் சனாதிபதியின் திட்டங்களும் தவிடு பொடியாகி மேலும் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றலாம் ரணில்விக்கிரமசிங்க போன்ற தன்னம்பிக்கை இல்லாத தலைவர் ஒருவர் இந்த நாட்டு தலைமைப் பீடத்தை ஏற்றால் மேலும் வலது சாரிகளின் ஆதிக்கம் இந்த நாட்டில் ஏற்படும். இடது சாரிகளும், வலது சாரிகளும் இந்த நாட்டில் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்கு இடம் கொடுக்காமல் நல்லதொரு மக்கள் ஆட்சியை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை மாற்றி அமைப்பது மிக அவசியம். நாட்டில் இனப் பிரச்சினை தீர்வுக்கு இறுதி முடிவு காணும் வரை அரசியல் யாப்பை மாற்றி புதிய யாப்பை தயாரிப்பது மிக சிரமான காரியமாகும். சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சர்வாதிகார போக்கை மாற்றுவது மிக அவசியம். சகல அதிகாரங்களையும் தன்னிடம் வைத்துக் கொண்டு திடீர் நடவடிக்கைகள் எடுப்பது நாட்டில் மாபெரும் பேரழிவுகள் ஏற்பட இடமுண்டு . ஆகவே சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை மாற்றி அமைப்பது மிக அவசியமாகும்.





# மாற்றீடான வலுவுள்ளோர் மகிழ்வுடன் வாழ வழியமைப்போம்

## -நாளை மாற்று வலுவுள்ளோர் தினம்-

**சூ.குகன்**

மாற்றீடான வலுவுடையோர்கள் சமூகத்தில் மதிக்கப்பட வேண்டும். உரிமையுடனும், சமத்துவத்துடன் வாழ வேண்டும் தமக்கும் உரிமைகள் உண்டு. தமக்கும் மனிதாபிமானம் உண்டு. சமூகத்தில் மற்றவர்கள்போல் நடமாட வேண்டும், சுயமாக

KAROD
WE FOR ALL ALL FOR US

திரியவும் தம்முடைய தேவைகளை தாமே பூர்த்தி செய்யக்கூடிய சுதந்திரம் அவர்களுக்கும் உண்டு என்பதை வெளிக் கொண்டு வரும் ஒரு விழிப்புணர்வாகவே மாற்றீடான வலுவுள்ளோர் தினம் வருடா வருடம் டிசம்பர் 03 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்களின் தேவைகளுக்கு அல்லது கருத்துக்களுக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களின் தேவைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யக்கூடிய அளவிலேயே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கங்கள் தமது நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தில் மாற்றீடான வலுவுள்ளோர்கள் எவ்வாறு பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். அவர்களது நோக்கம், தேவைகள் அதற்குரிய வழிவகைகள் அந்த வழிவகைகளை மேற்கொள்வதற்கு எவ்வாறான நடவடிக்கையினை பின்பற்றி வருகின்றனர். மற்றும் இவ்வருடம் ஊனமுற்றோர் தினம் எவ்வாறு கொண்டா




டப்பட இருக்கிறது போன்ற விடயங்களை அச்சங்கத்திடம் இருந்து பெற்றுக் கொண்டோம்.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் சங்கமும் ஏனைய சர்வதேசத்திலுள்ள நிறுவனங்கள் போல் தமது சங்கத்தில் அங்கத்தவர்களாக இருக்கும் ஒவ்வொரு மாற்றீடான வலுவுள்ளோரையும் கல்வி, கலாச்சாரம், பொருளாதாரம் போன்ற முக்கிய திட்டங்களில் முன்னெடுத்து இவர்களும் சமூகத்தில் சம உரிமைகளினூடாக சம பங்கெடுத்து வாழ வேண்டும். அதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கும் ஒரு தூர நோக்கத்துடனேயே இயங்கி வருகின்றது.

மேற்படி தூர நோக்கத்திற்குரிய வழிவகைகளை பார்க்கும் போது சமூகத்தில் மாற்றீடான வலுவுள்ளோரின் உரிமைகளைப் பாதுகாத்தல், கிராமிய மட்டத்திலான புனர்வாழ்வு வழிவகைகளை தம்மில் தாமே தங்கி நிற்கக்கூடிய வகையில் உருவாக்கிக் கொடுத்தல்.

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இல்லிடம், மருத்துவம், கல்வி, ஆதார உபகரணங்களை பெற்றுக் கொள்ள வழி சமைத்தல், பரந்த சமுதாயத்தில் தாமும் ஈடுபடவும் நடமாடவும் ஊக்கப்படுத்தல் மற்றும் உளரீதியான தாக்கங்கள் அழுத்தங்கள் என்பவற்றில் இருந்து விடுபட ஆலோசனை அழித்தல் வருமான சிக்கன, சேமிப்பு என்பவற்றை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளினை மேற்கொண்டு வரும் அதேவேளை பிறப்பில் ஊனமடையாது இருக்க தடுப்பு நடவடிக்கை சிலவற்றையும், அவர்களுக்குரிய வேலைவாய்ப்புக்களையும் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.



அந்த வகையில் ஊனமடையும் சர்ந்தர்ப்பங்களை இல்லாமற் செய்யும் நடவடிக்கை ஏனைய அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் தொடர்பினை ஏற்படுத்திவிடுதல் முக்கியமாக ஊனமுற்றோர்களுக்கு சர்வதேச ரீதியில் வழங்கப்படும் 3வீத சலுகைகளைப் பெற்று அரச அரசசார்பற்ற திணைக்களங்களில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வேலைத் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது.

மேலும் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கமானது மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவிலும் தனது தொடர்பு நிலையங்களை வைத்து அதனூடாக அப்பகுதியில் உள்ள மாற்றீடான வலுவுள்ளோருக்கு தேவையானவற்றை மேற்கொண்டு வருகிறது.

அந்தவகையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் கிளிநொச்சியிலும், கண்டாவளையில் கல்மடுநகரிலும், பூநகரியில் யோகபுரத்திலும், பளையில் பச்சிலைப்பள்ளி பகுதியிலும் தமது தொடர்பு நிலையங்களை அமைத்துக் கொண்டு அப்பகுதியில் வாழ்ந்து வரும் ஊனமுற்றோர்களை கிராமிய மட்டத்திலான புனர்வாழ்வினை மேற்கொண்டு வருகின்றது.

இதன் பிரதான தலைமைச் செயலகம் கிளிநொச்சியில் அமைந்துள்ளது. மொத்தம் 1825 ஊனமுற்ற அங்கத்தவர்கள் இச்சங்கத்திற்குள் உள்வாங்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

இவர்களது புனர்வாழ்வு நடவடிக்கையானது கிராமிய மட்டத்தில் ஆனது. அதாவது கிராமங்கள்தோறும் இடவசதிக்கு ஏற்றபடி தங்களது உறவுகளுடன் அவர்களின் உறவுகளிடமிருந்து பிரிக்காதவகையில் அவர்களுக்கு உளப்பாதிப்பு ஏற்படாத வகையில் பராமரித்து வரும் ஒரு நடவடிக்கையாகும்

இச்சங்கத்தில் இணைந்து இருக்கின்ற அங்கத்தவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் சுயமுயற்சியாக சிறு தொழில்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு உதாரணமாக உருத்திரபுரம் பகுதியில் வசித்து வரும் தவச்சந்திரன் என்பவரைக் குறிப்பிடலாம்.

இவர் தனது குடும்பத்தை தானே பார்க்க வேண்டும் ஏனையோரில் தங்கி வாழக்கூடாது என்ற கொள்கையுடன் இச்சங்கத்தில் ஒரு அங்கத்தவராக இருந்து கொண்டும் தனது சுயமுற்சியாக துவிச்சக்கர வண்டி திருத்தி வருகின்றார். அத்துடன் கதிரைக்கு வயர் பின்னுதல் போன்ற வேலைகளைச் செய்து வருகிறார்.

மேலும் இவர் கிளிநொச்சி ஊனமுற்றோர் சங்கத்தால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டி பின்னர் ஜப்பான் நாட்டிற்குக் கூட சென்று துவிச்சக்கர வண்டி ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்று மாவட்டத்திற்குப் பெருமையீட்டித் தந்துள்ளார்.



இவ்வாறு சகல வழிகளிலும், தமது சங்கத்தில் இணைந்த அங்கத்தவர்கள் ஒவ்வொருவரையும் முன்னேற்றமடையச் செய்யும் குறிக்கோளுடன் இயங்கிவரும் ஊனமுற்றோர் புனர்வாழ்வுச்சங்கம் இவ்வருடமும் ஊனமுற்றோர் தினத்தை மிகச்சிறப்பான முறையில் கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

நாளைய தினம் கொண்டாடப்படும் இவ் ஊனமுற்றோர் தினத்தில் இச்சங்கம் சில ஒத்துழைப்புக்களை மக்களிடமிருந்து எதிர்பார்க்கின்றது.

அந்த வகையில் மக்கள் வலுவுற்றோரின் கருத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவர்களை தமது உடன்பிறப்பாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கும் ஆற்றல் உண்டு. அவர்களின் ஆற்றலுக்கு ஏற்ற தொழில் வாய்ப்பினைப் பெற்றுக்கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

அத்துடன் வீதிகளில் அவர்கள் பயணம் மேற்கொள்ளும் போது அவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படாத வகையில் பயணத்தை இலகுபடுத்திக் கொடுக்க வேண்டும். மேலும் கண் தெரியாதவர்களுக்கு மணி ஓசைகளைக் கொடுத்து வீதிகளைக் கடப்பதற்கு உதவி செய்தல், காது கேட்காதவர்களுக்கு வெளிச்சத்தினூடான குறியீடுகளை வழங்கி


ஜப்பான் நாட்டிற்குச் சென்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த தவச்சந்திரன்

உதவி புரிய வேண்டும். குறிப்பாக சமூகத்தில் அவர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் நடமாட உதவி செய்ய வேண்டும் என்று பணிவாக வேண்டி நிற்கின்றனர்.

சர்வதேச ரீதியில் ஊனமுற்றோர் தினத்தை கொண்டாடும் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் 14 ஆவது ஆண்டை நிறைவு செய்து, அடுத்த 15 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்தச் சங்கம் பிறவியிலேயே ஊனமுற்ற 308 அங்கத்தவர்களையும், நோய் மூலம் ஊனமுற்ற 661 அங்கத்தவர்களையும், விபத்து மூலம் ஊனமுற்ற 107 அங்கத்தவர்களையும், யுத்தத்தின் மூலம் ஊனமுற்ற 749 அங்கத்தவர்களையும் பராமரித்து வருகின்றது.

இவற்றில் ஆண்கள் 1031 பேரும், பெண்கள் 794 பேரும் உள்ளனர். இவ்வாறு பராமரித்து வரும் வலுவுற்றோருக்கு தேவையானவற்றைச் செய்துகொள்ள நிறுவனங்கள் முன்வந்து நிதி உதவிகளைச் செய்யுமாக இருந்தால் அவர்களுடைய தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய முடியும் என்றும் எதிர்பார்க்கின்றனர்.

எனவே நாளைய தினம் சர்வதேசம் எங்கும் விழிப்புடன் கொண்டாடப்படும் ஊனமுற்றோர் தினம் கிளிநொச்சியிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

காலை 10.00 மணியளவில் கிளி பண்பாட்டு மண்டபத்தில் இடம் பெறும் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றனர் கிளிநொச்சி மாவட்ட ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தினர்.

# கொலைக்குற்றச்சாட்டு கைதிகள் மீதான விசாரணை நடைமுறையை மாற்ற யோசனை

(கொழும்பு)

கொலைச்சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்படுவோர் மீது மேற்கொள்ளப்படும் வழக்கு விசாரணைகளில் தற்போதைய நடைமுறைகளை மாற்றுவது குறித்து அரசாங்கத்திற்கு யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் நீதி மறுசீரமைப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவே இந்த யோசனையை முன்வைத்துள்ளது.

இலங்கையில் அதிகரித்துச் செல்லும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆராய வேண்டிய இந்தக் குழுவிற்கு சனாதிபதி வழக்கறிஞர் சி.ஆர்.டி.சில்வா தலைமைதாங்குவார். இக்குழுவில் சனாதிபதி வழக்கறிஞர் றஞ்சித் அபேசூரிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் பொலிஸ் அதிகாரிகள், அரசாங்க வழக்கறிஞர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

மனிதப் படுகொலைகள் தொடர்பான வழக்குகளைத் தொடரும் உரிமையை சட்டமா அதிபருக்கு வழங்க வேண்டுமென்று இக்குழு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

# கண்காணிப்புக்குழு உதவித்தலைவர் அடுத்தவாரம் பதவி விலகல்

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உதவித்தலைவர் ஹப்ருக் ஹக்லண்ட் தமது பதவியில் இருந்து விலகவுள்ளார்.

இந்தப் பதவி விலகல் எதிர்வரும் 8 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகிறது. இவருக்குப் பதிலாக வக்னவிங்கல் என்பவர் நியமிக்கப்படுள்ளதாகவும் தெரியவருகிறது. (32)

# கடத்தப்பட்ட கடற்படைச் சிப்பாய் பாலத்தருகே போடப்பட்டார்

கடற்படைச் சிப்பாய் ஒருவரை இனம் தெரியாத சிலர் கடத்திச் சென்று கை, கால்களைக் கட்டி ஜாஎல பாலத்தின் அருகே விட்டுச் சென்றுள்ளனர்.கடந்த 28 ஆம் திகதி இடம் பெற்ற சம்பவத்தில் கடத்திச் செல்லப்பட்டவரின் பெயர் ஜே.எம்.காமினி திசாநாயக்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் தனது அடையாள அட்டையை தவறவிட்டமை சம்பந்தமாக கோட்டை பொலிஸ் காரியாலத்தில் புகார் செய்து விட்டுத் திரும்பியபொழுது இவர் கடத்தப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

# மனோ மாஸ்ரர் கடத்தப்பட்டது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

## - மகன் குறித்த விபரத்தை கோருகிறார் தாயார்

கருணா குழுவினால் கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் தனது மகனைப் பற்றிய விபரங்களைப் பெற்றுத் தருமாறு ஈ.என்.டி.எல்.எவ் அமைப்பின் முக்கியஸ்தரான மனோ மாஸ்ரரின் தாயார் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தினில் முறைப்பாடொன்றை நேற்றுமுன்தினம் செய்துள்ளார்.

சுமார் 71 வயதுடைய மூதாட்டியான பாக்கியநாதன் இராசமணி என்பவரே இம்முறைப்பாட்டைச் செய்துள்ளார். யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் இவர் தனது முறைப்பாட்டினில் மேலும் விபரிக்கையில் "பாக்கியநாதன் இராஜரட்ணம் அல்லது மனோ மாஸ்ரர் (வயது-51) என அழைக்கப்படும் தனது மகன் அண்மையில் கொழும்பு வந்திருந்த வேளையில் கடத்தப்பட்டதாக செய்திகள் மூலம் தான் அறிந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை, வட பழனியிலுள்ள கங்கை அம்மன் காலனியில் தனது இரு மகன்மாருடனும், மனைவியுடனும் மனோ மாஸ்ரர் வாழ்ந்து வந்திருந்ததாகவும், அண்மையில் குடும்பத்தினரை அங்கேயே விட்டுவிட்டு இவர் மட்டும் கொழும்பு திரும்பியிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தங்கியிருந்த வேளையிலேயே அவர் கடத்தப்பட்டதாகவும், காணாமற்போயுள்ள தனது மகனான மனோ மாஸ்ரரினது நிலை பற்றிய தகவல்களைப் பெற்றுத் தருமாறும் அம்முறைப்பாட்டினில் அவர் கோரியுள்ளார்.(27)

# மட்டு.அம்பாறை மாவட்டங்களில் சூறாவளி விழிப்பூட்டல் மாநாடு

கிழக்கு மாகாணத்தில் சூறாவளி அச்சம் ஏற்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் விழிப்பூட்டல் மாநாடு இடம்பெற்றுள்ளது. பிரதேச செயலர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளுக்காக இந்த மாநாடு நடத்தப்பட்டது.

இலங்கை வளிமண்டல திணைக்களம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

பெண்கள் வலுவூட்டல் சமூக நலன் அமைச்சின் இடமுகாமைத்துவ நிலையத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர். வி.சண்முகத்தின் தலைமையில் இந்த மாநாடு இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தில் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி பாரிய சூறாவளி வீசியது குறிப்பிடத்தக்கதாகும்.

அதேபோன்ற சூறாவளி இந்த மாதத்தில் வீசலாம் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே இந்த மாநாடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

# கொழும்பு-தலங்கமவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பிற்கு வெளியே தலங்கமவில் நேற்று முன்தினமிரவு தமிழ் இளைஞரொருவர் இனந்தெரியாத நபர்களினால் வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஏற்கனவே சிலாபத்தில் வசித்து வந்த இவர் தொழில் நிமித்தம் அண்மையில்தான் தலங்கமவிற்கு சென்றிருந்தார். இவரது சடலம் இதுவரை அடையாளம் கானப்படவில்லை.வெள்ளை நிறக்காரில் வந்த துப்பாக்கிதாரிகளே இவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்கள் என தலங்கம பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன. இந்த கொலை பாதாள உலகத்துடன் தொடர்புடையதா அல்லது தமிழ்க் குழுக்களுடன் தொடர்புடையதா என்பது குறித்து தாம் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# பாராளுமன்றத்திற்கருகில் நடமாடியதாக தமிழ்ப்பெண் உட்பட மூவர் பொலிசாரால் கைது

பாராளுமன்றத்திற்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழ்ப் பெண்ணொருவர் உட்பட மூவர் நேற்று முன் தினம் மாலை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்தப் பெண் அருகிலுள்ள வீடொன்றில் பணிப் பெண்ணாக பணியாற்றி வருகின்றார்.

இருப்பினும் இம்மூவரும் எதற்காக அப் பகுதியில் நடமாடினார்கள் என்பது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இது ஒரு புறமிருக்க நுகேகொடயில் இதுவரை இலங்கையில் பாவனையிலில்லாத அதிநவீனரக துப்பாக்கி மற்றும் கைத்துப்பாக்கி ஆகியவற்றை ரூபா 5 இலட்சத்திற்கு விற்பனை செய்ய முற்பட்ட நபரொருவரையும்நேற்றுமுன்தினமிரவு பொலிசார் கைது செய்துள்ளார்கள்.

## ஸ்ரீமணிஅத்துலத்முதலி நேற்றுக் காலமானார்

(கொழும்பு)

முன்னாள் போக்குவரத்து மற்றும் சுற்றாடல் அமைச்சர் ஸ்ரீமணி அத்துலத்முதலி நேற்றுக் காலை காலமானார்.

புற்றுநோயினால் பீடிக்கப்பட்டிருந்த இவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையொன்றிலே காலமானார்.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலி கொல்லப்பட்டதையடுத்து ஸ்ரீமணி அத்துலத்முதலி அரசியலில் பிரவேசித்தார். ஸ்ரீமணி அத்துலத்முதலி முதன் முறையாக 1994ஆம் ஆண்டு பாராளுமன்றத்திற்கு தேர்தெடுக்கப்பட்டார். இந்த ஆண்டு அமைக்கப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் சுற்றாடல் மற்றும் போக்குவரத்து அமைச்சராக செயலாற்றியதுடன் சிறிது காலம் மகளிர் விவகார அமைச்சராகவும் அவர் விளங்கினார். இறக்கும் போது இவரது வயது 58 ஆகும்.


# பணிநிலை வேண்டுகை

**போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவிற்கு பின்வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

01. பணிநிலை :- அலுவலக சிற்றூழியர்.

வயது :- 25 தொடக்கம் 45 வயதிற்குட்பட்டவர்கள்.

சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

02. பணிநிலை :- காவலாளி

வயது :- 35தொடக்கம் 50 வயதிற்குட்பட்டவர்கள்

சம்பளம் :- நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

**மேற்படி பணிநிலைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் போக்குவரத்துக் கண்காணிப் புப்பிரிவு நடுவப்பணியகத்துடன் 07.12.2004 இற்கு முன் நேரில் தொடர்புகொள்ளவும்.**

பொறுப்பாளர்,
போக்குவரத்துக்கண்காணிப்புப்பிரிவு,
கிளிநொச்சி.

(சி.10647)



# கால்நடை வளர்ப்போருக்கான முக்கிய அறிவித்தல்

கால்நடை கட்டுப்பாட்டு சட்ட விதிகளை மீறி பயிர் அழிவுகளை ஏற்படுத்தியதும் கட்டாக்காலி கால் நடைகள், பிரதான வீதியான ஏ-9 வீதியில் போக்குவரத்துக்கு இடையூறு உண்டு பண்ணும் கால்நடைகளுமான பின்வரும் குறி, நிறங்களையுடைய கால்நடைகள் சென்ற 15ஆம், 16ஆம் திகதிகளில் பிடித்துக்கட்டப்பட்டுள்ளது. எனவே எதிர்வரும் 06.12.2004 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு முன் உரியவர்கள் பெற்றுக்கொள்ளத் தவறின் கிளி.பாரதிபுர கிராம அபிவிருத்திச்சங்க வளாகத்தில் கிளி.மாவட்ட த.பொ.மேம்பாட்டு நிறுவனத்தினரால் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

விபரம்

| நிறம் | குறி | இனம் |
|---|---|---|
| கறுப்பு | S.M. 24 | நாம்பன் |
| சிவப்பு | K.N25 | பசு |
| வெள்ளை | V.N225 | நாம்பன் |
| வெள்ளை | சு | நாம்பன் |
| செங்காரி | T.R | பசு |
| சிவப்பு | A.L | பசு |
| மாவெள்ளை | K.S | நாம்பன் |
| வெள்ளை | ஜ | பசு |
| மாவெள்ளை | S.M | பசு |
| வெள்ளை | | பசு |

(5324)

# இந்தியா-ஆசியான் அமைப்பு நாடுகளிடையே பல விடயங்களில் கூட்டாக செயலாற்ற இணக்கம்

## - ஒப்பந்தத்தில் மன்மோகன்சிங் கைச்சாத்து

**அமைதி, முன்னேற்றம், வளங்களைப் பகிர்ந்துகொள்ளல் ஆகிய வற்றுக்கான ஒப்பந்தத்தில் இந்தியாவும் 10 ஆசியான் நாடுகளும் கையெழுத்திட்டன. லாவோஸில் வியன்டியானில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆசியான் மாநாட்டில் இந்தியா-ஆசியான் நாடுகளுக்கு இடையிலான கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது.**

அமைதி, முன்னேற்றம், வளங்களைப் பகிர்ந்துகொள்ளல் ஆகிய வற்றுக்கான ஆசியான்-இந்தியா ஒப்பந்தத்தில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங கையெழுத்திட்டார். அந்நிய நேரடி முதலீடு தாராளமாகக்கிடைக்கவும் ஒப்பந்தம் வகைசெய்யும்.

"21ஆம் நூற்றாண்டு ஆசிய நாடுகளின் நூற்றாண்டாக மிளிரும் வண்ணம் ஒப்பந்த நாடுகள் சேர்ந்து பணியாற்ற வேண்டும்" என்றார் மன்மோகன் சிங். ஒப்பந்த நாடுகளிடையே வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, கலாச்சாரம், விளையாட்டு, மக்களிடையே நேரடித்தொடர்பு மேம்பட ஒப்பந்தம் வழிசெய்யும் நாடுகளுக்கிடையிலான போதை மருந்து, ஆயுதம் கடத்தல், சட்டவிரோதமாக ஆட்களைக்குடியமர்த்தல், கடத்தல், கடற்கொள்ளை போன்ற மோசமான குற்றநடவடிக்கைகளை தடுத்துத் தீவிரமாகப் போராடவும், ஒப்பந்தம் வகைசெய்கிறது.

நாலு பக்க ஒத்துழைப்பு ஒப்பந்தம் தவிர 9பக்க செயற்றிட்டமும் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி உலக வர்த்தக ஒப்பந்த அமைப்புப் போன்ற சர்வதேச அமைப்புகளின் மாநாட்டில் இந்தியா-ஆசியான் நாடுகளின் பொருளாதாரம் உணவு, மனித ஆற்றல் மற்றும் பாதுகாப்புக் குறித்து பொதுவான சவால்களை எடுத்துரைக்கும் போது கடைப்பிடிக்கவேண்டிய ஒத்துழைப்பு அம்சங்கள் இந்த செயற்றிட்டத்தில் இடம்பெற்றுள்ளன. நாடுகளுக்கிடையே பொருளாதார உறவுகளைப் பலப்படுத்தும் நோக்கில் பிராந்திய வர்த்தகம் மற்றும் முதலீட்டுப் பகுதியை உருவாக்கவும் இந்தியா மற்றும் 10 ஆசியான் நாடுகள் முடிவுசெய்துள்ளன. இதன் மூலம் நாடுகளிடையே நேரடி அந்நிய முதலீடு, நிதிக் கூட்டுறவு, கடன்வசதி தாராளமாகக் கிடைக்க வழியேற்படும்.

மற்றைய நாட்டின் சுதந்திரம், இறையாண்மை, உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்பதையும் ஒப்பந்த நாடுகள் ஒப்புக் கொண்டுள்ளன. சமத்துவம், பரஸ்பரம், மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகளுக்கிடையே நீண்ட கால ஒத்துழைப்புக்கும், வழிகாணப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையே மக்கள் மற்றும் போக்குவரத்து முன்னேற்றத்திற்கு முன்னுரிமை தரப்படும். வறுமை ஒழிப்பு, அணுவாயுதப்பரவல் தடை, அறிவியல், தகவல், உயிரியல், தொழில்நுட்பங்களில் கூட்டாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளல், புதிய தொழில்நுட்பங்களை வர்த்தகமயமாக்க உதவுதல் போன்றவற்றுக்கும் ஒப்பந்தத்தில் இடம் தரப்பட்டுள்ளது. நாடுகளுக்கிடையே பல்வேறுதுறைகளிலும், மனித ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளவும் ஒருமித்த ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இந்தியா-மியான்மார்-தாய்லாந்து முத்தரப்பு நாடுகளின் நெடுஞ்சாலைப பணியை விரைவுபடுத்துதல் மற்றும் அதை லாவோஸ், கம்போடியாவரை விரிவாக்குவதன் அவசியம் குறித்தும் செயற்றிட்டத்தில் உள்ளன. இந்தியாவுக்கு வந்து மேற்படிப்பைத் தொடரவிரும்பும் ஆசியான் நாடுகளின் மாணவர்கள் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சலுகைகள் மற்றும் உதவிகளையளிக்கவும் இந்தியா முன்வந்துள்ளது. விண்வெளித் தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பு, தொலைத்தொடர்பு, ஒலி-ஒளிபரப்பு, விளையாட்டு ஆகிய துறைகளிலும் இணைந்து பணியாற்றவும் ஒப்பந்தத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஐ.நா.மற்றும் அதன் அமைப்புக்களில் சீர்திருத்தம் ஏற்படவும், சனநாயகம் மேம்படவும் ஒருங்கிணைந்த முயற்சிகளை ஒப்பந்த நாடுகள் மேற்கொள்ள ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. வலுவான ஆசியான் நாடுகள் குழுவில் மலேசியா, பாவோஸ், கம்போடியா, இந்தோனேசியா, மியானமார், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம் ஆகிய பத்து நாடுகள் இடம்பெற்றுள்ளன. இக்குழுவில் இந்திய, சீனா போன்ற நாடுகள் முக்கிய உறுபபு நாடுகளாக இருக்கின்றனா.



லாவோஸ் நாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அவுஸ்திரேலிய நாட்டுப்பிரதமர் ஜோன்ஹவர்டைச் சந்தித்து அவருடன் கை குலுக்கிய காட்சி.

# அமைதி காக்கும் பணிக்கு 3000 இந்தியப் படையினர்!

## -கொங்கோ பயணம்

(புதுடில்லி)

கொங்கோ ஜனநாயக குடியரசு நாட்டில் அமைதி காப்புப் பணிக்காக இந்தியா தனது பங்காக 3 ஆயிரம் துருப்புகளை அனுப்பியுள்ளது. அவர்களை கிவுஸ் மாகாணத்தில் பணியில் ஈடுபடுத்தும் வேலை திங்கட்கிழமை தொடங்கிவிட்டது. கொங்கோவுக்கும் ரெவாண்டாவுக்கும் இடையில் பதற்றம் அதிகரித்து வரும் வேளையில் இந்தியத் துருப்புக்கள் அங்கு பணியில் இருப்பது நல்லது என்று ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

அங்கு போக்குவரத்துப் பயன்பாட்டுக்கு 6 உலங்குவானூர்திகள், சண்டையில் ஈடுபட 4 உலங்குவானூர்திகள், கண்காணிப்புப் பணிக்கு 4 உலங்குவானூர்திகள் என்று மொத்தம் 14 உலங்குவானூர்திகளை இந்தியா பயன்படுத்துகிறது.



இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஆகாஷ் ஏவுகணை சோதனை நேற்று முன்தினம் மீண்டும் வெற்றிகரமாக நடத்தப்பட் டது. சீறிப்பாய்ந்த ஆகாஷ் ஏவுகணை, குறிப்பிட்ட இலக்கை துல்லியமாகத் தாக்கியது. ஒரிசா மாநிலம் பாலசோர் என்ற இடத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் வங்கக்கடலில் அமைந்துள்ள சந்திபபூர் ஏவுதளத்தில் இருந்து நேற்று முன்தினம் முற்பகல் 11.57 மணி அளவில் இந்த ஆகாஷ் ஏவுகணை விண்ணில் வெற்றிகரமாகச் செலுத்தப்பட்டது.

# மடாதிபதி ஜெயேந்திரர் கைது நடவடிக்கை எனது அரசியல் வாழ்வில் எடுத்த வேதனையான முடிவு

## –தமிழக முதல்வர் கவலை

(புதுடில்லி)

ஜெயேந்திரர் கைது நடவடிக்கை "எனது அரசியல் வாழ்க்கையில் எடுக்கப்பட்ட மிக வேதனையான முடிவு" என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். தமிழகத்தின் அடுத்த நிதியாண்டுக்கான திட்ட ஒதுக்கீடு குறித்து மத்திய திட்டக்குழுத் துணைத் தலைவருடன் விவாதித்து முடிவெடுக்க செவ்வாய்க்கிழமை புதுடில்லி பயணமானார்.

அப்போது ஜெயேந்திரர் கைது குறித்து செய்தியாளர்கள் கேட்ட போது மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்தக் கைது விவகாரத்துக்குத் தனிப்பட்ட விரோதம் காரணம் என்று கூறுவது கேலிக் கூத்தான விடயம். எனது அரசு கடமையைச் செய்கிறது. காவல் துறை தனது கடமைய்யச் செய்கிறது. சட்டம் தன் கடமையைச் செய்கிறது. இப்பிரச்சினை நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதால் இது குறித்து அதிகம் பேசமுடியாது.

அதேநேரத்தில் ஒரு விடயத்தை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எனது அரசியல் வாழ்க்கையில் எடுக்கப்பட்ட மிகத் தேவையான முடிவு இது தான். இதை நான் மகிழ்ச்சியுடன் செய்யவில்லை. சூழ்நிலைகள் காரணமாக இந்த முடிவை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டேன். இது போன்ற முடிவை நான் எடுக்க விரும்பியதில்லை. எனது கடமையை மட்டுமே செய்கிறேன். அதேபோல் அரசியல் இலாபத்திற்காகக் கைது செய்ததாகக் கூறுவது மிகக் கடுமையான வார்த்தைகளால் கண்டிக்கத்தக்கது. யாருக்காகவும் இந்தக் கைது நடவடிக்கையை எடுக்கவில்லை. இதைத் திட்டமிட்டோ, எதிர்பார்த்தோ செய்யவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்ரமான முடிவு. துரதிர்ஷ்ரமான இந்த நேரத்தில் நான் முதல்வராக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. அதே நேரத்தில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த வழக்கு விசாரணை நடைபெறும்போது உண்மை வெளிச்சத்துக்கு வரும். இந்த விவகாரம் தொடர்பாக பா.ஜ.க நடாத்தும் போராட்டம் தவறான வழிகாட்டுதலால் நடக்கும் போராட்டம ஆகும். கூட்டணியைப் பொறுத்த வரை அ.தி.மு.கவுடன் உறவு இல்லை என்று பா.ஜ.க வினரே அறிவித்து விட்ட நிலையில் அது பற்றிக் கூற எதுவும் இல்லை என்றார்.

# திரிணமூல் காங்கிரஸ் போராட்டத்தை நிறுத்த நீதிமன்றம் கடும் உத்தரவு

(கொல்கத்தா)

டிசம்பர் 3ஆம் திகதி தேசியவாத திரிணமூல் காங்கிரஸ் நடத்தத் திட்டமிட்டுள்ள கதவடைப்புப் போராட்டம் சட்டவிரோதமானது என்றும், அதை கைவிடும்படியும் கொல்கத்தா உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக தொடரப்பட்ட பொது நல மனுவை விசாரித்த நீதிபதிகள் இந்த உத்தரவைப் பிறப்பித்தமை பொதுமக்களுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாமல் போக்குவரத்தை வழக்கம்போல் இயக்க நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போராட்டத்தை திரும்பப் பெறுவதாக உடனடியாகப் பத்திரிகைச் செய்தி வெளியிடும்படி தேசியவாத திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மமதா பானர்ஜிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக டிசம்பர்7ஆம் திகதி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யும்படியும் உத்தரவில் கூறப்பட்டுள்ளது. குறித்த தினத்தன்று பணிக்கு வராதவர்களுக்கு ஊதியத்தை நிறுத்தும் உத்தரவைப் பிறப்பிக்குமாறு மாநில மற்றும் மத்திய அரசுகளை நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. இதனிடையில் திட்டமிட்டபடி கதவடைப்புப் போராட்டம் நடக்கும் எனறு கொல்கத்தாவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் மமதா கூறியுள்ளார்.


## சாவு அறிவித்தல்

*அமரர் பாலசுப்பிரமணியம் மகாலட்சுமி*

வன்னிவிளாங்குளத்தைப் பிறப்பிடமாகவும், கோவில் வீதி, குருமன்காடு வவுனியாவைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மகாலட்சுமி 29-11-2004 காலமானார். அன்னாரது இறுதிக் கிரியைகள் வவுனியாவில் 02-12-2004 (இன்று) நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(5326)

## இர்பான் பதானின் இடத்தைப் பிடிப்பேன் பாகிஸ்தான் புதுமுக வீரர் மொகமட் கலீல்



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள பாகிஸ்தான் அணியில் இணைக்கப்பட்டுள்ள புதுமுக வீரரான வேகப் பந்து வீச்சாளர் மொகமட் கலீல் தனது கன்னிப் போட்டியில் திறமையை வெளிப்படுத்தி இர்பான்பதானின் இடத்தைப் பிடிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பதானால் சாதிக்க முடிந்ததை ஏன் தன்னால் சாதிக்க முடியாது என அவர் வினா எழும்பியுள்ளார்.

20 வருடங்களுக்கு முன்பு முதலாவது நியூசிலாந்து சுற்றுலாவின்போது வசிம் அக்ரம் 2ஆவது டெஸ்டில் 10 விக்கெட்டுக்களை சாய்த்தது போல தானும் எடுத்து அவருக்கு உதாரணமாக விளங்கப் போவதாக கூறியிருக்கிறார்.

22 வயதான கலீல் அவுஸ்திரேலிய செல்லவுள்ள 17 பேர் கொண்ட அணியில் இடம்பெறுகிறார் அத்துடன் 21வயதான மொகமட் அசிஸூம் இடம்பெற்றுள்ளார். இவ் இருவரும் திறமுடன் செயற்படுவதாக பயிற்றுநரான பொப் வூல்மர் கூறியுள்ளார். உலக சம்பியனான அவுஸ்திரேலியவுடனான போட்டி என்பதால் இந்தத் தொடரில் அனுபவமிக்க பந்து வீச்சாளர்களும் அனுபவமற்ற புதிய வீரர்களும் தவறிழைக்காமல் ஆட வேண்டும் என முன்னாள் அணித்தலைவர் வசிம் அக்ரம் அறிவுரை கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அவுஸ்திரேலியாவுடனான 3 டெஸ்ட் போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகளும் பங்கு கொள்ளும். முக்கோண ஒருநாள் போட்டிகளிலும் பங்கேற்கும்

## டெண்டுல்கர் மீண்டும் பிரகாசிப்பார் துணைத் தலைவர் ராவிட் கூறுகின்றார்


இந்திய கிரிக்கெட் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குபவர் டெண்டுல்கர். அவர் சமீப காலமாக மிக மோசமாக ஆடிவருகிறார்.

தென்ஆபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் அவர் 3 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தார். 2 ஆவது டெஸ்டில் நேற்று முன்தின ஆட்டத்தில் 20 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து அவர் மோசமாக ஆடிவருவது ரசிகர்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் துணைத் தலைவர் ராவிட், டெண்டுல்கர் மீண்டும் தனது திறமையை வெளிப்படுத்துவார் எனக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;

டெண்டுல்கர் தலைசிறந்த கிரிக்கெட் வீரர். அவர் 120டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ளார். அனைவருக்கும் இது போன்று பிரச்சினைகள் சில சமயங்களில் ஏற்படும்.



இந்த நிலையில் இருந்து டெண்டுல்கர் மிக விரைவாக மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பித் தனது திறமையை வெளிப்படுத்துவார். அவர் இரண்டு மா[illegible]ங்களாக காயம் காரணமாக ஆடவில்லை. இது ஒன்றும் பெரிய இடைவெளியென்று கூறமுடியாது.

மேலும் முதல் இன்னிங்சில் தென் ஆபிரிக்க அணியை விடக் கூடுதலாக 100 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்தால் போதும். அதன் மூலம் அந்த அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்த முடியும். இந்த டெஸ்டில் சிறப்பாக ஆடி வெற்றி பெறுவதே எங்களது குறிக்கோள் என்று தெரிவித்தார்.

## டெண்டுல்கர் பிடியை எடுத்தது வாழ்நாளில் சிறந்தது–ரோட்ஸ்



டெண்டுல்கரின் பிடியை எடுத்தது தனது கிரிக்கெட்டி[illegible] வாழ்நாளில் மிகச் சிறந்தது என தென்னாபிரிக்கா அணியின் முன்னாள் வீரா ரோட்ஸ் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது;

1992ஆம் ஆண்டு உலக கோப்பை போட்டியின்போது டெண்டுல்கர் அடித்த பந்தை பிடித்தது எனது கிரிக்கெட் வாழ்நாளில் சிறந்தது. எனது வெற்றிக்கு துடிப்பும் அதிக கவனமுமே காரணம். தற்போது கிரிக்கெட்டில் அவுஸ்திரேலிய அணிதலை சிறந்து விளங்குகின்றது. அந்த அணி பலம் வாய்ததாக உள்ளது. தென் ஆபிரிக்கா அணியில் இளம் வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் திறனை மிகச்சிறப்பாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

2007ஆம் ஆண்டு உலகக் கோப்பைக்கு முன்பாகதென்ஆபிரிக்காஅணிதலை சிறந்து விளங்கும் இவ்வாறு அவர் கூறினார்.

### கொல்கத்தா டெஸ்ட் போட்டி

## ஹர்பஜன் சிங் அபாரபந்து வீச்சு தென்னாபிரிக்க அணி தடுமாற்றம்




இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கொல்கத்தாவில் நடைபெற்று வரும் இறுதி டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இக்கட்டான நிலையில் உள்ளது.

போட்டியின் நான்காவது நாளான நேற்றுத் தனது இரண்டாவது இன்னிங்சை துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கா 5 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ஸ்சிமித் 71 ஓட்டங்களையும், அன்ருகோல் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்று ஆட்டமிழந்தனர். டிப்பனர்,ருடெல்வ், அம்லா ஒற்றை ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தனர். ஆட்டமிழக்காது கலிஸ் 51 ஓட்டத்துடனும் பௌரின் 9 ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர்.





பந்துவீச்சில்ஹர்பஜன்சிங் மிகச்சிறப்பாக பந்து வீசி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். கும்ளே ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.முன்னதாக இந்திய அணி தனது முதல் இன்னிங்சிற்காக 411 ஓட்டங்களைப் பெற்றது. சேவாக்,ராவிட், கார்த்திக் 88,80,46 ஓட்டங்களை முறையே பெற்றனர். பந்து வீச்சில் நிற்றினி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸ் 305 ஓட்டங்கள். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

## உலக யூனியர் செஸ் போட்டி இந்தியாவின் ஹரிகிருஷ்ணா சம்பியன்

உலக யூனியர் செஸ் போட்டியில் இந்தியாவின் ஹரிகிருஷ்ணா சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.






ஆர்சனல் அணிக்கெதிராக லிவர்பூல் அணிக்காக ஆடி வென்ற நில்மில்லர் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற சம்பியன் லீக் போட்டி ஒன்றில் மொனக் கோவின் செபஸ்ரியன் ஜகில்லசியுடன் மோதலுக்குத் தயாராகிறார்.

கேரளா மாநிலம் கொச்சியில் உலக யூனியர் செஸ் சம்பியன்ஷிப் போட்டி நடந்தது. நேற்று முன்தினம் நடந்த 13ஆவது மற்றும் கடைசிச் சுற்றுப்போட்டியில் நமது கிராண்ட்மாஸ்டர் ஹரிகிருஷ்ணாஹங்கேரியின் பெரங்க் பெர்க்சைச் சந்தித்தார். இருவரும் மிகுந்த கவனத்துடன் செயற்பட்டனர். இறுதியில் 50ஆவது நகர்த்தலில் போட்டியை சமன் செய்ய ஒத்துக்கொள்ள, ஹரிகிருஷ்ணா 10 புள்ளிகளுடன் சம்பியன் பட்டம் வென்றார். இதன் மூலம் விஸ்வநாதன் ஆனந்திற்குப் பிறகு உலக ஜூனியர் பட்டம் பெறும் இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார். 1987இல் பிலிப்பைன்சில் நடந்தபோட்டியில் ஆனந்த் பட்டம் வென்றார். இந்த வெற்றி குறித்து மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்த ஹரிகிருஷ்ணா, “2005 சனவரியில் நடக்கவுள்ள ஆசிய சம்பியன்ஷிப்போட்டியில் சாதிப்பதே அடுத்த குறிக்கோள்” என்றார். ஹரிகிருஷ்ணாவுக்குக் கடும் போட்டியைக் கொடுத்த சீனாவின் ஜாசன் 9.5 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையே பிடிக்க முடிந்தது. இவர் நேற்று முன்தினம் போலந்தின் ரோடஸ்லாவ் வோஜ்டாகிடம் தோல்வியடைந்து வாய்ப்பை இழந்தார். பெண்கள் (20வயதிற்குட்பட்ட) பிரிவில் ரஷ்யாவின் எகாதிரினா கோர்பட் 10.5புள்ளிகளுடன் சம்பியன் பட்டம் வென்றார்.

## விதிமுறை என்றால் அனைவருக்கும் பொதுவானதே சர்வதேச கிரிக்கெட் சபைக்கு எதிராக ஆதர்டன் புலம்பல்

சர்வதேச கிரிக்கெட் சபையில் இந்தியா ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது. இங்கிலாந்து போன்ற அணிகளுக்கு மட்டும் ஓரவஞ்சனை செய்யப்படுகிறது” என்று புலம்புகிறார் மைக் ஆதர்டன்.

ஒருநாள் போட்டி ஒன்றில் பந்துவீசி முடிக்க வரையறுக்கப்பட்ட நேரத்தை விட அதிகம் எடுத்துக் கொண்டதால் இந்திய கிரிக்கெட் தலைவர் சவுரவ் கங்குலிக்கு இரண்டு டெஸ்ட் தடை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து மேன்முறையீடு செ[illegible]ர் கங்குலி.டிம் கேசில் என்ற நியூசிலாந்து சட்[illegible]ணி விசாரணைக்குப் பிறகு கங்குலி மீதான தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

இது சர்வதேச கிரிக்கெட்டில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவுக்கு மட்டும் என்ன சலுகை என்று வெளிநாட்டு அணிகள் குமுறுகின்றன. இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக் ஆதர்டன் இதுபற்றி அந்நாட்டு நாளிதழில் எழுதிய கட்டுரையில்,

சர்வதேச கிரிக்கெட் சபையில் இந்தியாவின் ஆதிக்கம் எந்தளவுக்குக்கொடி கட்டிப் பறக்கிறது என்பதையே இந்தச் சம்பவம் உணர்த்துகிறது. விதிமுறைகள் என்றால் அது அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.முதலில் தடைவிதிப்பதும், அடுத்து அதை நீக்குவதும் முறையல்ல.



அந்தப் போட்டியில் எதிரணி வீரரின் காயம், மைதானம் ஈரமாக இருந்தது போன்ற விடயங்களே இந்தியா பந்துவீச அதிகநேரம் எடுத்துக்கொண்டதற்கான காரணம் என விசாரணை அதிகாரி டிம்கேசில் தெரிவித்துள்ளார். அப்படியென்றால் அந்தப்போட்டி பற்றி புகார் தெரிவித்தமேட்ச்ரெப்ரிகிளைவ் லொயிட் இந்த விடயங்கள் தெரியாதவரா? அல்லது போட்டி நடக்கும் போது லொயிட் தூங்கிக்கொண்டிருந்தாரா? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

## அவுஸ். அணியில் காடிச்

நியூசிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகின்றது. இரு அணிகள் இடையே நடைபெற்ற டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனைத் தொடர்ந்து இரு அணிகள் மோதும் மூன்று ஒருநாள் போட்டி நடக்கவுள்ளது. இதில் பங்கு பெறும் அவுஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய சுற்றுப் பயணத்தில் சிறப்பாக ஆடிய சைமன் காடிச்சுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

## இவ்வருடத்தில் அதிகடெஸ்ட் விக்கெட்டை இந்தியாவின் அனில் கும்ளே கைப்பற்றினார்




இவ் வருடத்தில் அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் பட்டியலில் இந்தியாவின் அனில் கும்ளே முதலிடத்தில் உள்ளார்.

இவ் வருடத்தில் இது வரை 10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள கும்ளே 62 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.

இவரைத் தவிர அவுஸ்திரேலியாவின் ஷேன்வோர்ன் பத்துப் போட்டிகளில் 61 விக்கெட்டுக்களையும் இங்கிலாந்தின் ஹாமிஷன் 11 போட்டிகளில் 61 விக்கெட்டுக்களையும் வீழ்த்திஇரண்டாம் மூன்றாம்இடங்களில் உள்ளனர்.இதேவேளை நேற்று தென்னபிரிக்காவுக்கு எதிராக டிம்பன்னரின் விக்கெட்டை வீழ்த்திய கும்ளே ரிச்சட் ஹட்லியின் 432 என்ற எண்ணிக் கையைச் சமன் செய்தார்.

## சிந்தனைக்கு



நாம் ஒன்று பட்ட மக்களாக ஒரே தேசிய சக்தியாக- அனைவரும் திரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-12-2004
தொலைபேசி / தொலைநகல் 021-2283948,060-2213244
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## பொறுப்பற்ற ஆட்சியாளர்!

"சிறிலங்கா அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை பயங்கரமான அழுத் தத்திற்கு உள்ளாகியுள்ளது....., சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்படுவது மிக மிக அவசியமானதாகும" என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் டொன் புறூவஹொவ்டேயின் எச்சரிக்கை முற்றிலுமான யதார்த்தத்தின் பிரதிபலிப்பே.

கடந்தமூன்றாண்டு கால யுத்த நிறுத்த காலப் பகுதியில் தற்போதைய சூழ்நிலையே அதிகரித்த பதற்றம் கொண்ட காலப்பகுதி என்பது உண்மையே. கடந்த காலங்களில் சிறிலங்கா ஆயுதப் படையினரும் சரி அவர்களினால் வளர்க்கப்படும் இனத் துரோகக் கும்பல்களும் சரி விடுதலைப்புலிகள் மீதே இலக்கு வைத்துத் தாக்குதலை நடத்தினர். இவை புலிகளால் பொறுமையாக எதிர் கொள்ளப்பட்டன.

ஆனால் அண்மைக்காலமாக அச்சூழ்நிலையில் மேலும் ஒரு படி முன்னேற்றமாகப் புலிகளின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனத் தாக்குதல்கள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இந்தவகையில் கடந்த ஓரிரு வாரங்களுக்குள் நடந்தவையாக வல்வெட்டித்துறை சிதம் பராக்கல்லூரி விளையாட்டுஅரங்கில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடு மன்னார் நகர்ப் பகுதி, வவுனியா வேப்பங்குளம் பகுதி மற்றும் திரு மலை மாவட்டத்தில் நிகழ்ந்த வன்முறை என தமிழ்மக்கள் மீது வன்முறைகள்கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இந்நிலையானது யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு முற்றிலும் விரோதமானது என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. அதுமட்டுமல்ல யுத்த நிறுத்த உடன்பாட்டை முடிவிற்குக் கொண்டு வரும் நோக்கில் இவை மேற்கொள்ளப்படுவ தாகக்கருதுவதும், சந் தேகிப்பதும் கூடத் தவறில்லை என்றே கூறலாம்.

இத்தகையதொரு சூழ்நிலைக்கு சந்திரிகா அரசாங்கத்தின் பொறுப்பற்ற தன்மையே காரணமாகும். சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஏழு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படாமையே இதனை நிரூபணம் செய்யப் போதுமானதாகும்.

இன்று சிறிலங்காவை ஆட்சிசெய்யும் ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தை ஒரே கொள்கையுடைய அரசு என்று நோக்குதல் தவறாகும். இவ்அரசாங்கத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பங்காளியாக ஜே.வி.பி உள்ளது. இவ்விரு தரப்பும் கூட்டணி அமைத் திருப்பினும் இருதரப்பினர் இடையே இனப்பிரச்சினை விடயத்தில் முரண்பாடுகள் உள்ளன.

இம்முரண்பாடு இரு கட்சிகளுமே தேர்தல் உடன்பாடு குறித்து வெளியிட்ட கூட்டறிக்கையிலேயே தெளிவாக வெளியிடப்பட்டன. இவை அன்று வெளிப்படுத்தப்பட்டவற்றிலும் பார்க்க தற்போது அதன் வெளிப்பாடு தீவிரமாகவும், மோசமானதாகவும் உள்ளது. இவ் விருகட்சிகளிலும் ஆட்சி அதிகாரத்தைப் பங்குபோட்டுக் கொள்வதைத்தவிர வேறு எந்த விதத்திலும் இரு தரப்பும் உடன்பட்ட போக்கைக் கொண்டவையாக இல்லை.

இந் நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படும் எனக் கூறிக் கொண்டிருப்பினும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் வகையிலான செயற்பாட்டை அது கொண்டதாக இல்லை. சமாதான ஏற் பாட்டாளர்களான நோர்வே தரப்பினர் பல தடவைகள் சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்தபோதும் உடனடியாகப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான ஒத்துழைப்பை அவர்களால் பெற முடியவில்லை.

ஆனால் ஜே.வி.பியோ சமாதான பேச்சுவார்த்தை என்பதையே ஏற்பதாக இல்லை. ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசைக் கேவலமாக விமர்சித்தும் நடத்தியும் வந்த அதேவேளையில் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை என்பதனையும் நிராகரித்து வருகின்றது. இந்த வகையில் ஜே.வி.பியின் நடத்தை பொறுப்பற்றதென்றாகவே உள்ளது.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி பொறுப்பற்றதனமாக நடந்து கொள்வது இது முதற்தடவையல்ல. 1987 இலும் இவ்வாறே நடந்து கொண்டது ஆனால் ஜே.வி.பி. தனது செயற்பாடுகளில் எப்பொழுதும் வெற்றி பெறவில்லை. 1972 இல் நடத்திய கிளர்ச்சியின் போதும் சரி 1987 இறங்கிய வன்முறையிலும் சரி அது வாங்கிக் கட்டிக் கொண்டதே வரலாறாகும். இதனைத்தவிர இவ்விருதோல்விகளின் பின்பும் மன்னிப்புப் பெற்றும் இரண்டு பிரதான கட்சிகளின் அரசியல் காய் நகர்த்தலின் விளைவுகளுமே ஓடி ஒழிந்தவர்கள் எல்லாம் திரும்பி வரக்கூடியதாக இருந்ததே ஒழிய ஜே.வி.பியின் திறமையினாலோ, வல்லமையினாலோ அல்ல.

இந்தநிலையில் எவ்வாறு கடந்த கால அரசியல் பொறுப்பற்ற தனமாக நடந்து கொண்டதோ அதே போன்று தற்பொழுதும் பொறுப்பற்றதனமாகவே ஜே.வி.பி நடந்து கொள்ள முற்படுகின்றது. ஆனால் ஜே.வி.பி.யின் இப்பிரச்சினை தொடர்பான போக்கு ஜே.வி.பி. மட்டுமல்ல சிறிலங்கா அரசிற்கும் பாதகமானதாகவே அமையும். ஏனெனில் ஜே.வி.பி.யின் தற்போதைய போக்கிற்கு அரசாங்கம் தலை சாய்க்குமானால் தமிழர் தாயகத்தில் தனி அரசு ஒன்று உருவாகுவதைத் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாகி விடும்.

# எமது உரிமைக்காக குரல் கொடுக்கும் போது படைகளால் தாக்கப்படுவது தொடர்கிறது

### -மன்னார் பொது அமைப்புகள் தெரிவிப்பு-

எமது மக்கள் தமிழ் உரிமைக் காக குரல் கொடுக்கும் போதெல்லாம் அரச படையினரினால் தாக்கப்படுவதும் உடமைகள் சேத மாக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இனிமேலும் இந்த இழிவு நிலமையைத் தொடர அனுமதிக்க முடியாது. எனது மன்னார் மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், தொழிற்சங்கங்களின் இணையம் மற்றும் பொது அமைப்புக்கள் தொிவித்துள்ளன.

இவ் அமைப்புக்களால் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

-தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்தும் சிறிலங்கா இராணுவமும் பொலிசாரும் எமது மக்களின் உணர்வுகளை அடக்கவும், எமது உரிமைகளை சேத மாக்குவதற்கும் இது திட்டமிட்ட ஒரு சதி நடவடிக்கையாகும். எமது மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளை திட்டமிட்டே தாக்கி வலிந்து போருக்கு இழுக்க அரச படைகள் வருகின்றன. அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எம்மை நம்பி நிராயுத பாணிகளாக அரசியலில் ஈடுபட்டு வரும் போராளிகளைத் தாக்குவது ஒரு கோழைத் தனமான செயலாகும். அதே போல் அவர்களின் அலுவலகங்களைச் சேதப்படுத்துவது கோழைத்தனமே. எனவே மக்களே சிந்தியுங்கள் எதிரிப்படைக்கு தகுந்த பாடம் புகட்டுங்கள். உங்கள் ஆதரவு அதற்கு விடையளிக்கட்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (18)

### -திருகோணமலையில் அரசாங்கம் மேற்கொண்ட-

# கலத்தடுப்பு நடவடிக்கை பாரபட்சமானது ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

திருகோணமலையில் அண்மையில் அரசாங்கம் மேற்கொண்ட கலத் தடுப்பு நடவடிக்கையானது பக்கச் சார்பானது என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரேலியே ரத்தன தேரர் பிரதி பாதுகாப்பு அமைச்சருக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள் ளார். பொலிசார் சிங்கள மக்களுக்கு எதிராக நடந்து கொண்டமையானது அவர்கள் உரிய வகையில் செயற் படவில்லை என்பதை காட்டு கின்றது எனவே இதனை விசாரணை செய்ய வேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை பாராளு மன்றத்தில் மாவீரர் தின நிகழ்வுகளை நடத்த அனுமதி வழங்கப் பட்டதா? என அவர் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த சபா நாயகர் வி.ஜே.மு லொக்குபண்டார உத்தியோக பூர்வ அனுமதி எதுவும் இதற்கு வழங்கப்பட வில்லை. இது பற்றி விசாரித்த போது சுடரேற்றி இவ்வாறான நிகழ்வு நடந்தது என்பதைத்தான் அறிந்ததாகக் கூறினார்.

இது தொடர்பாக உரையாற்றிய வண.அத்துரலியே ரத்னதேரர் அரசியல் யாப்பிற்கு பதவிப் பிரமாணம் செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எப்படி அதனை மீறிச் செயற்பட முடியும் என வினா வெழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம் பந்தன் ஆற்றிய உரையில் அரசியல் யாப்பிற்குப் புறம்பான சில கருத்துக்களை ஹன்சாட்டிலிருந்து நீக்குமாறு தான் உத்தரவிட்டுள்ளதாகக் கூறினார்.

எதிர்க் கட்சிகளின் பிரதான அமைப்பாளர் மஹிந்த சமரசிங்க உரையாற்றுகையில்

இந்த விடயம் தொடர்பாக தொடர்ந்தும் கருத்துக்களை தெரிவிப்பது போதுமானதல்ல இதற்காக நிலையியல் கட்டளைக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டு இவ்வாறான கருத்துக்களை தெரிவிப்பதை நிறுத்தும் வகையில் சரத் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றார். (32)

# பிந்துனுவெவ படுகொலை வழக்கில் மரண தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கு எதிரான தீர்ப்பு ஒத்திவைப்பு

பிந்துனுவெவ தடுப்புமுகாம் தமிழ் இளைஞர்கள் படுகொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பு வழங் கப்பட்ட நால்வரினதும் மேன் முறையீட்டு மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பை ஒத்தி வைத்துள்ளது.

பிந்துனுவெவ முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட நால்வருக்கு எதிராகத்தாக்கல் செய்யப் பட்ட 83 குற்றச்சாட்டுகளின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட் பார் நீதிபதிகளான சரத் அம் பேப்பிட்டிய எரிக் பஸநாயக்க உபாலி அபயரட்ண ஆகியோர் இவர்களுக்கு மரணதண்டனை தீர்ப்பளித்தனர். இவ்வாறு தீர்ப்பு அளிக்கப்பட்டவர்களில் மூவர் உயா நீதிமன்றில் தாக்கல் செய்த மேன் முறையீட்டு மனுவில், தமக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிருபிப்பதற்கு எந்த ஆதாரங்களும் இல்லை என்றும் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு எதிராக தாம் தாக்கல் செய்த ஆதார ஆவ ணங்கள் தொடர்பாக மேல் நீதி மன்றம் கூடிய கரிசனை செலுத்த வில்லை என்றும் ஆகவே மேல் நீதிமன்றம் தமக்கு எதிராகச் சுமத்திய குற்றச்சாட்டுக்களையும் வழங்கிய தீர்ப்பையும் நீக்கி தம்மை விடுதலை செய்யுமாறும் கோரப்பட்டிருந்தது. இவர்களது மனுவைப் பரிசீலனை செய்த உயர்நீதிமன்ற நீதிவான்களான ரி.பி.வீரசூரிய, நிகால் ஜெயசிங்க, என்.கே.உடலகம, என்.ஈ.திஸநாயக்க, ராஜா பெர்ன்ாண்டோ ஆகியோர் எதிரி களுக்கு எதிரான மேல் நீதிமன்றின் தீர்ப்பு தொடர்பான தமது முடிவை ஒத்தி வைத்துள்ளனர். எதிரிகளான சேனக ஜயம்பதி கருணாசேன, டி.பி.சேப்பால திஸநாயக்க, எம்.ஏ.சாமி, ஆர்.எம்.பிரேமானந்த ஆகியோரே மேல்நீதிமன்றால் மரண தண்டனை தீர்ப்பு அளிக் கப்பட்டவர்கள் ஆவார். இவர்களில் டி.பி.சேப்பால திஸநாயக்க, எம்.ஏ.சாமி, ஆர்.எம்.பிரேமானந்த ஆகியோர் தாக்கல் செய்த மேன் முறையீட்டு மனு சார்பில் சனாதிபதி சட்டத்தரணிகளான ரங்சித் பெர்னாண்டோ, டி.எஸ்.விஜயசிங்க மற்றும் ரின்ஸி அரசகுலரட்ண ஆகியோர் ஆஜராகினர். சட்டமா அதிபர் சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் ஸி.ஆர்.டி.சில்வா ஆஜரானார்.

# பாராளுமன்றில் சனநாயகத்திற்கு வழிவிட கூட்டமைப்பு கோரிக்கை

பாராளுமன்றத்தில் சன நாயகத்துக்கு வழிவிடப்பட வேண்டும் என தமிழ் தேசியக் கூட்டமைப்புக் கோரியுள்ளது.

அரசியலமைப்புக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துரைக்கும்போது அதனைப் பாராளுமன்ற குறிப்புப் புத்தகத்தில் இருந்து நீக்க வேண்டும் என்ற ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலியே ரத்னதேரரின் கருத்து தொடர்பிலேயே இந்தக் கோரிக்கையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு விடுத்துள்ளது. இது தொடர்பாக குரல் தந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தமது கருத்துக்களை பாரர்ளுமன்றத்தில் தெரிவிக்கும் உரிமைக்கு தடை விதிக்கும் நடவடிக்கையாகவே ஜாதிகஹெல உறுமயவின் கோரிகைை அமைந்துள்ளதாகத் தொிவிததார். (32)

# பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அசோக ஜெயவர்த்தன பதவியேற்பு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக முன்னாள் வடகிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்தனா நேற்றுப் பதவி ஏற்றுக் கொண்டார். ஏற்கனவே இப் பதவி வகித்த சிறில் ஹேரத் ஓய்வு பெற்றுள்ளதையடுத்தே இந்த நியமனம் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து ஏற்பட்டுள்ள வடகிழக்கு மாகாண ஆளுநர் வெற்றிடத்துக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அண்மையில் இணைந்து கொண்ட முன்னாள் அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார்.

# தனிநாடு கோரப்படுமாயின் இராணுவத்துடன் மக்களையும் இணைத்துப் போராடுவோம்

—ஹெல உறுமய பா. உ. அத்துரலியே ரத்ன தேரர் எச்சரிக்கை

தமிழர்களுக்கு தனியான நாடு கோரப்படுமாயின் வடக்கு கிழக்கிலுள்ள 2000 ஆண்டு பழமை வாய்ந்த எமது வாழ்விடங்களை மீட்க இராணுவத்தையும் மக்களையும் ஒன்றிணைத்துப் பெரிய போராட்டம் நடத்துவோம் என ஜாதிகஹெல உறுமயவின் முன்னணி உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள தமது பாரம்பரிய இடங்கள் சில குழுக்களால் அழிக்கப்பட்டிருப்பதாகவும், அதனை உறுதிப்படுத்த பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை அமைக்குமாறு கோர விருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



திருகோணமலை ஆலங்குளம் துயிலும் இல்லத்தில் திருமலைக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் சுடரேற்றுவதைப் படத்தில் காணலாம்.

## வட்டுக்கோட்டையில் வீதி விபத்து இளைஞன் பரிதாப மரணம்

வட்டுக்கோட்டை துணைவிச் சந்திப்பகுதியினில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ் செயலகத்தினில் நடைபெறவிருந்த சாரதி அனுமதிப் பத்திரபரீட்சைக்கு தோற்றவென உந்துருளியில் வந்துகொண்டு இருந்த வேளையிலே இவ் இளைஞன் விபத்திற்குள்ளாகியுள்ளார்.

வீதியால் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் ஒன்றினைத் தாண்டிச் செல்ல முற்பட்ட வேளையிலே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. உயிரிழந்த இளைஞன் அதே இடத்தைச்சேர்ந்த ஜெயபாலன் கஜேந்திரன் (வயது20) என அடையாளம் காணப்பட்டுள்ளார். (27,33)

## கருத்தரங்கு நடைபெறாது

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் 3ஆம், 4ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவிருந்த சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு மேற்படிதினங்களில் நடைபெறமாட்டாதென சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளதாகக் கரைச்சிப் பிரதேச செயலகசமூக சேவை உத்தியோகத்தர்பொன் நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (சோ)

## பொருந்தொகை...

தமது படை விரைவில் ஆரம்பிக்கும் என்றும், மியன்மாருக்கு இராணுவ தளபாடங்களையும் நுட்ப ஆலோசனைகளையும் வழங்குவது பற்றி பேச்சு நடக்கிறது என்றும் அவர் சொன்னார். சிறிலங்காவில் இருந்து ஒரு பெருந்தொகையானவர்கள் அடுத்த ஆண்டில் இந்தியாவில் எமது கடற்படை துறைமுகங்களில் பயி[illegible] பெறுவார்கள். அவர்களின் கடற்படைக் கப்பல்களை எமது துறைமு[illegible]களில் வைத்து மீளப் பொருத்துவது, பராமரிப்பது என்பவற்றில் நாம் உதவிகளை வழங்குவோம் என்று அவர் விவரித்தார். நீர்மூழ்கிக் கப்பல் பயிற்சிகளை ஓர் நட்பு நாட்டுக்கு இந்திய கடற்படை வழங்க[illegible]ம் என்று தெரிவித்த அவர், அது எந்த நாடு என்பதைக் குறிப்பிட மறுத்துவிட்டார்.

## புலிகளின்...

பட்சமாக ஒன்றை நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என வலியுறுத்தி உள்ள அதேவேளையில் தற்பொழுது நிபந்தனைகள் இன்றி பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவேண்டுமென்று அச்சுறுத்தும் தொனியில் கோரிக்கை விடுத்துள்ளமை நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு எந்தவகையிலும் ஏற்புடையதல்ல. இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஐந்தாம் திகதி ஒஸ்லோவில் அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் கைச்சாத்திட்ட ஆவணப் பிரமாணங்களுக்கு அமைய நிரந்தர தீர்வொன்றை ஆராயும் அதேவேளை முன்னுரிமை அடிப்படையில் வடக்குக்,கிழக்கு மக்களின் அவசர மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித்தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக இடைக்கால நிர்வாக அதிகார சபை ஒன்றை நிறுவுவது பற்றி பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கம் பகிரங்கமாகவும் நோர்வே அரசாங்கத்தின் ஏற்பாட்டினூடாகவும் அறிவித்துள்ளது.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருக்கவேண்டும் என்பதில் அரசாங்கம் தொடாந்தும் உறுதியாக உள்ளது.

தற்போதைய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் சீர்குலைக்கும் சகல அத்து மீறல்களையும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் கண்டிக்கின்றது.

இவை மக்கள் மத்தியில் அச்சத்தையும் பதற்றத்தையும் உருவாக்குகின்றன. அத்துடன் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாத்து சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச்செல்லும் நோக்கத்துடன அரசாங்கம் இனக்குழுக்களுக்கிடையேயும் சமாதானம் பேண மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் பாதிக்கும் வகையில் அது அமைந்துள்ளது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி இலங்கை அரசாங்கம் நோர்வே அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளதென தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## புலிகள்...

கொண்டதாகவும், 15வீடுகளைத் தீக்கிரையாக்கியதாகவும், செய்[illegible] வெளியிடப்பட்டது. இச்செய்தி உண்மைக்குப் புறம்பானது என்பதையும் இச்செய்தியை தமிழீழ விடுதலைப்புலிகள் முற்றுமுழுதாக மறுப்பதுடன் சிறிலங்கா அரச வானொலியின் அவதூறு பிரச்சாரத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன் சிறிலங்கா அரச வானொலியில் இச்செய்தி தொடர்பாக யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறில....

இரண்டு தசாப்தப் போரினாற் பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்குவதற்கான அடிப்படைச் சமாதான இலகாகும் என்றார்.

## தமிழ்...

வறிக்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா செல்வம் அடைக்கலநாதன், சுரேஸ் பிறேமச்சந்திரன் ,கஜேந்திரகுமார், ஈழவேந்தன், ஜோசப்பரராஜசிங்கம் ரவிராஜ், சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன், ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தீர்மானிக்கப்பட்ட இந்தியா- சிறிலங்கா பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை தமிழ் மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளன. தமிழர்களுடைய பிரச்சினை தீர்க்கப்படாமலுள்ள கடந்த வருடத்தில் சமாதான முன்னெடுப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. சிறிலங்கா அரசு பேச்சுவார்த்தை மூலம் தம்முடைய பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்கள் என்பதில் தமிழ்மக்கள் சந்தேகப்படத் தொடங்கிவிட்டனர்.

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பைப் பூர்த்தி செய்வதன் பின்னணி சிறிலங்கா அரசு அதன் இராணுவத்தைப் பலப்படுத்துவதாகவே தமிழ் மக்களிற்கு தோன்றுகின்றது. நீண்டகசப்பான ஆயுதப் பிரச்சினையின் பின்னரே போர் நிறுத்த உடன் படிக்கை பூர்த்தியாக்கப்பட்டது. தமிழ் மக்களின் பாதிப்புக்கள் இன்னும் முடிவடையவில்லை நூறாயிரக் கணக்கானவர்கள் தொடர்ச்சியாக இன்னும் இடமபெயர்ந்தவர்களாகவும், வீடுகள் அற்றவர்களாகவும் உள்ளனர். சிறிலங்கா அரசு பேர்நிறுத்தத்திற்கு நுழைந்து விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை சர்வதேச அனுசரணையாளரின் உதவியுடன் ஆரம்பித்தது. ஏனெனில் சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு மூலம், தீர்வு காண முடியாது என ஏற்றுக் கொண்டுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையில் இராணுவச் சமநிலை இரு பகுதியினரிடமும் இருந்தது. ஆனால் தமிழ்மக்கள் இந்தியாவுடனான ஒப்பந்தங்கள், உதவிகள், நீதியற்றது எனவும் இராணுவச் சமநிலையை குழப்பும் எனவும் உணருகின்றனர்.

தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வுக்கு சிறிலங்கா அரசு இணங்காது என்பது இந்தியாவுக்கு நன்கு தெரியும் சிறிலங்கா அரசு இன்றும் கூட சமாதானப் பேச்சுக்களில் இரு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளது.

நூறாயிரக்கணக்கான இடம் பெயர்ந்த மக்களின் பரிதாப நிலையை மாற்ற இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அவசரமான தேவையாகும். ஐக்கிய தேசியக்கட்சி, விடுதலைப்புலிகளும், அரசும் எந்த உடன்படிக்கை செய்தாலும் தாம் நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக வெளிப்படையாக விருப்பம் தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய அரசியற் கட்சிகளுடன் அரசாங்கங்கள் இடைக்காலத்தன்னாட்சி உரிமை உடன்படிக்கைக்கு மூன்றில்இரண்டு பங்கு கூடிய வாக்குகளைப் பெற முடியும். அரசாங்கம் இடைக்காலத் தன்னாட்சி உரிமையோசனை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தெளிவான செய்தியை விடுதலைப்புலிகளுக்கு அனுப்புவதற்கு இன்னும் தயக்கம் காட்டி வருகிறது. இச்செயற்பாடு அரசாங்கம் தமிழ் மக்களின் பேச்சுக்களின் மூலம் அரசியற் தீர்வைக் காண்பதில் அரசின் பொறுப்புப்பற்றிய நம்பிக்கையைக் குறைப்பதுடன் மீளப் போரை ஆரம்பிப்பதற்கான சூழலை அரசு உருவாக்குகின்றது என்ற பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் பின்னணியிலேயே இந்திய சிறிலங்காவின் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை சமாதான முன்னெடுப்புகளிற்கும் தமிழ் மக்களின் அவாவிற்கும் பாதகமாக இருககும் என அஞ்சுகின்றனர்.

எதுவாயினும் இன்றைய சிறிலங்காவின் முக்கிய தேவை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வு காண்பதே. தமிழ் மக்கள் தமிழரின் விருப்புகளிற்கு இந்தியா பாதகம் ஏற்படுத்தாது என நம்புகின்றனர். தமிழ் மக்கள் இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒத்துழைபபுத் தொடர்பாகவும், வடக்கு, கிழக்கு இராணுவ நடவடிக்கை விஸ்தரிப்பு தொடர்பாகவும் மீள் பரிசோதனை செய்ய முறையிட்டுள்ளனர் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இ.நி.வ...

அவர் மேலும் கூறுகையில்; 'புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு நாட்டைப் பிளவுபடுத்தும் ஆவணம் பிரிவினையை ஏற்படுத்தும் ஆவணம். அதனைச் சபையில் வாக்கெடுப்புக்கு விடலாம். பிரச்சினை யில்லை. ஆனால் அதை அமுற்படுத்த அரசு முற்படுமேயானால் தெற்கில் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் நிலமை உருவாகும்.

அப்படியொரு நிலை உருவானால் அதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பொறுப்பேற்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிபந்தனையையும் அவர்களின் பிரிவினைவாத அரசியலையும் ஏற்றுக்கொள்ள மக்கள் தயாரில்லை. இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை வரைபை முன்வைப்பதற்கு புலிகளுக்கு எவ்வளவு உரிமையுள்ளதோ அதை எதிர்ப்பதற்கு அதே அளவு உரிமை எமக்கு உள்ளது.

நாங்கள் தமிழ் மக்களுக்கு என்றுமே எதிரிகளில்லை. அவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளை நாம் உணர்கிறோம். அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உண்மையான எந்தக் கட்சியுடனும் எந்த அமைப்புடனும் பேச்சு நடத்த நாம் தயார். ஆனால் மாவீரர் தினத்தன்று கருணா விடுத்த அறிக்கையில் பிரபாகரன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்துள்ளார். ஆகவே தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்ற கேள்வி எம்முன் இன்று எழுந்துள்ளது". என்று கூறியுள்ளார்.


அறிவமுது பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்

அறிமுகவிழா

- கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில்
- 02.12.2004 வியாழக்கிழமை மாலை 3.மணி
- மனக்கோலம் -முனைவர் கோபூர்
- போர் உலா - கப்டன் மலரவன்
- உண்மை மனிதனின் - ரசிய புதினம்
- பண்டிதர் நாட்குறிப்பேடு

ஆகியவற்றை வெளியிட்டு பேசுவோம்

சிறப்புரை.

தொல் திருமாவளவன்
விடுதலைச் சிறுத்தைகள் – தமிழ் நாடு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பேரிகை (சி.10839) அறிவமுது பதிப்பகம்



கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1944 08 08



இறப்பு 2004 11 30

அமரர் மார்க்கண்டு பாலசுந்தரம்

கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் மார்க்கண்டு பாலசுந்தரம் அவர்கள் 30.11.2004 அன்று காலமாகியதையிட்டு நாமும் அன்னாருக்காக கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அக்குடும்பத்தினரின் துயரிலும் பங்குகொள்கின்றேன்.

(சி-10840)

நண்பர்,
முரளிதரன்,
காரைநகர்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.